[illegible]

No.37 18 Sep 1930

(C)

BL
M24, M28K4
M30.3.37
189121

671

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly
வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 3] 1930 ஞு செப்டம்பர் மீ 18உ [No 37.

8-NOV-1930

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 721
2. அப்பர் (இரத்தினப் பரிட்சை)
E. N. தணிகாசலமுதலியார் B.A. B.L. 723
3. மாதவி மாதவம்.
பொ. இராமாநுஜன் 725
4. தமிழ்ப்பாடம் (நைடதம்—நளன் தூதுப் படலம்) 728
5. குறுந்தொகை (பாட்டு 168—182)
K. இராமரத்நம் ஐயர் B.A. 730
6. கம்ப ராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 734
7. வர்த்தமானம் 739

## கலாநிலயம்

### பெரும்பாலோர் பிழை.

189124

அரசியல் சபைகளை அமைத்து அவைகளுக்குப் பொதுஜனங்களினிடைநின்று சிலரைத் தேர்ந்தனுப்பி அவர்களைக்கொண்டு தேயத்தின் நன்மைக்கு ஏற்றவாறு ஆட்சியை நடத்துவது என்னும் இக்கருத்தில் அடங்கியுள கொள்கைகளில் இரண்டைமாத்திரம் எடுத்துச் சிறிதிங்கு ஆராய்வோம். அவைகளைப் பிரதிநிதித்துவம் (Representation), பெரும்பாலோர் பிழையாமை (The majority cannot be wrong) என்று பெயரிட்டழைக்கலாம். இவையிரண்டும் ஒன்றினையொன்று சார்ந்துமிருக்கின்றன.

தன்னால் நேரே செய்ய இயலாததைப் பிறரைக்கொண்டு செய்வித்தல் பிரதிநிதித்துவம். பொதுஜனங்கள் தங்களுடைய நன்மைக்காகவே தங்களைக்கொண்டே தாமே தங்களை ஆண்டு கொள்வதுதான் ஆட்சிமுறையில் மிகச் சிறந்ததென்பது நாகரிகமடைந்து மேன்மேலும் முன்னேறிக்கொண்டு வருகின்றதெனக் கருதப்படும் மேனாடுகளின் அடிப்படையான கொள்கை. இந்த வாசகத்திலுள்ள ஏகாரங்கள் பிரிநிலையொடு தேற்றமும் காட்டி, நாகரிகம் என்ற சொல்லினின்று அதன் இயற்கைப் பொருளாகிய 'கண்ணோட்டம்' என்பதை ஓட்டிவிடுகின்றன. இக்கொள்கை நாகரிகமற்றதாய் நிற்கின்ற செய்தியை நினைத்துணர இயலாதார் கிடக்க, நடைமுறை நிகழ்ச்சியில் அது மானுடப் பான்மையைப் பலவிதங்களில் அவலமாக்கி வருவதைச் சிறிது சிந்தித்துத் தேர்ந்து கொள்ளக் கூடியவரும் சிலர் இருப்பார் என நம்புகின்றோம்.

ஒருதேயத்தின் ஜனங்களடங்கலும் தங்களைத்தாங்களே ஆண்டுகொள்வதென்றால் அத்தனைபேரும் அரசுவீற்றிருப்பதென்பது சிறிதும் இயலாதென்பது பற்றிப் பிரதிநிதித்துவம் என்னுங் கொள்கை எழலாயிற்று. இதனால், ஜனத்தொகுதி தனக்குப் பதிலாகச் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களைக்கொண்டு ஆட்சியை நடத்திக்கொள்கின்றது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவோர் எவ்வெவ்வகையில் யார்யாருக்கு எவ்வண்ணம் பிரதிநிதிகளாய் அமையவேண்டும் என்பது கேள்வி. இதற்காகத் தேயத்தை எல்லைபற்றிய பல பாகங்களாகப் பிரித்து அவ்வப்பாகங்களில் இருப்பவர் தங்கள்தங்களுடைய குறைகளை நீக்கிக்கொண்டு நன்மையைப் பெறுமாறு சில பிரதிநிதிகளைத் தேர்ந்தனுப்புகின்றனர். நிலத்தின் எல்லையினால் மாத்திரமல்லாமல் வேறுசில வகைகளிலும் பிரதிநிதிகள் அவசியமெனக் கருதப்படுவதையும் யாவரும் அறிவார். சில சாதியார்களும், சில மதத்தினர்களும், சில தொழிலினர்களும், சில நிலையினர்களும், தத்தம் நலங்களைப் பாதுகாக்கும்பொருட்டுத் தமக்குத் தனித்தனி பிரதிநிதிகள் வேண்டுமென மன்றாடுவதையும் கண்டு வருகின்றோம். இவ்விதம் மன்றாடுகின்ற தலைவர்கள் பெரும்பாலும் விழைவது தங்களுடைய தனி ஊதியமேயானாலும், அந்தக் கொள்கையின் அடிப்படையான இரகசியத்தை ஆழ்ந்து நோக்குங்கால் அது மானுட அவமானத்திற்கே காரணமாயிருப்பது தெரியவரும். ஓர் இனத்தான், ஒரு சாதியான், ஒரு

தொழிலான், ஒரு நிலையினன், மற்ற இனம் சாதி தொழில் நிலை மாகாணம் முதலியவைகளைச் சேர்ந்தவர்களுடைய நன்மையையும் நடுநின்று நோக்கிச் செய்வான் என்ற நம்பிக்கையில்லாமையாலன்றோ இத்தனி பிரதிநிதித்துவம் இத்துணை வன்மையொடு வேண்டப்படுகின்றது. இந்த அவநம்பிக்கையே அடிப்படையாக இருக்கின்றபோது, பிரதிநிதியாய்ச் செல்பவன் ஒவ்வொருவனும் தன் தன் சுயலாபத்தையே நினைத்து விவகரிப்பதைவிட்டுத் தன்னைப் பிரதிநிதியா யனுப்பினவர் நன்மைகளை நாடுவான் என்பது என்னநிச்சயம்! இந்த நிச்சயமில்லாமையே எல்லாநாட்டுப் பிரதிநிதிச் சபைகளின் விவகாரங்களாலும் நிலைநாட்டப்பெறுவதைக் கண்கூடாகப் பார்த்துவருகின்றோம். அல்லது, பிரதிநிதிகள் சுயநலங்கருதாது தங்கள் தொகுதியின் நலத்திற்கே பாடுபடுகின்றவர்களாக அமைகின்றனரென்று கொண்டாலும், எத்தனை வகை மாநுடர்களுக்கு எவ்வளவு பிரதிநிதிகள் வேண்டுமென எல்லை கட்டுவது எங்ஙனம். ஆடவர்கள் பெண்களின்நன்மையைக் காக்கமாட்டார்கள் என்னும் அவநம்பிக்கையால் பெண்களுக்கெனத் தனிப் பிரதிநிதி வேண்டுமென்கின்றனர். பணக்காரர் ஏழைத்தொழிலாளர்களது நலத்தைக் கருதமாட்டார்களென, ஏழைகளுக்குத் தனிப் பிரதிநிதிகள் வேண்டியதாகின்றது. இவ்வாறு தொடர்ந்துசென்றால், குருடர் செவிடர் பிணியாளர் முதலியவர்களுடைய நன்மையைக்காப்பதற்குச் சில குருடர்களும் செவிடர்களும் பிணியாளர்களும் அவர்களுடைய தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டாவோ! குற்றவாளிகளினுடைய நன்மையைக் காப்பதற்குச் சில குற்றவாளிப் பிரதிநிதிகள் வேண்டும். நடுவயது மனிதர், சிறுவர் விருத்தாப்பியர்களின் நலங்களை நாடுவார்களென்ற நம்பிக்கைமாத்திரம் எங்கிருந்துவந்தது. ஒன்றுமுதல் நூறு வரையில் வயதுள்ளவர்களில் அவ்வவ் வயதினர்களுக்கு அவ்வவ்வயதுப் பிரதிநிதிகள் வேண்டுவதும் இன்றியமையாததே. இப்படியே இன்னும் வகைகளுந் தொகைகளும் மாந்தர்க்குள் எத்தனையோ அத்தனைக்கும் தனித்தனிப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற அவசியம் இந்நம்பிக்கையில்லா முறையால் ஏற்படுகின்றதென்றால் வேறென்ன இயம்பவேண்டும்.

இனி, இவ்வண்ணம் தேர்ந்தெடுப்பதிலும், தேர்ந்தெடுக்கப்பட்டவர் சட்ட திட்டங்கள் நிறுவுவதிலும், அடங்கியிருப்பது பெரும்பாலோர் ஒவ்வுகின்றதே ஏற்பதற்குரிய நன்மை என்னுங் கொள்கை. "உங்களுக்குப் பிரதிநிதியாகத்தக்கவன் நானே நானே" என்று ஒருவன் இருவர் நால்வர் பதின்மர் ஒரு தொகுதிக்கு 'அபேக்ஷகர்களாக' நிற்கின்றனர். கல்வி அறிவு குணம் முதலிய நலங்களால் உயர்ந்தவர் இவர்களுக்குள் யாரென அளக்குங் கருவி அந்த ஓட்டுப் பெட்டியே. தகுதி யுடையவர்களே அதிக ஓட்டுப் பெறுகின்றார்கள் என்னும் நியதி யில்லாமை எவர்க்குந் தெரியும். தகுதியுடையவன் தேர்ந்தெடுக்கப்படுவான் என்ற முடிவு போக, தேர்ந்தெடுக்கப்பட்டவனே தகுதியுடையவனெனக் கருதவேண்டி முடிகின்றது. இனி, இவ்வண்ணம் தேர்தலடைந்தவர் சட்ட சபைகளில் சட்ட திட்டங்களை நிறுவுங்காலையில், ஒருதிறத்தார் இது தக்கதென்றும் மறுதிறத்தார் அன்றென்றும் வாதித்துப் பிறகு பெரும்பாலோர் எண்ணின்படி முடிவாகின்றது. இந்தவிதப் பிரதிநிதியாட்சியில் இம்முறை யொன்றே இயன்றதாகும். ஆனால், உலகப் பொதுவிலேனும் தனித்தொகுதியிலேனும், குடும்பங்களிற்குள்ளேனும், அறிவு குணம் ஒழுக்கம் முதலியவைகளால் உயர்ந்தவர் சிறுபகுதியினரே யன்றிப் பெரும்பகுதியோரல்லரென்பது விடய வுணர்வுடையவர்க்கெல்லாம் தெரிந்ததொன்று. பெரும்பாலோர் புரிவது பிழையே என்று மாத்யூ ஆர்னல்ட் (Mathew Arnold) முதலிய அறிஞர்கள் முறையிடுகின்றனர். "அழைக்கப்படுவர் அனேகர்; ஆனால் தேர்தற்குரியவர் மிகச்சிலரே" (Many are called but few are chosen) என்பது கிறிஸ்தவ வேதவாக்கியங்களிலொன்று. உலகஅநுபவமுடையோர்க்கு இதனில் யாதும் புதுமையில்லை. தனியாக வொருவனுக்கு நல்லறிவோ நற்குணமோ இல்லையென்ற அவநம்பிக்கையால், பத்து பேரை ஒன்று சேர்த்து விட்டபின் அவநம்பிக்கைக்குரிய நிலை பத்துமடங்கு அதிகமாகுமே யல்லாது, நம்பிக்கை தோன்றுவதற்கு ஒரு சிறிது இடமேனும் ஏது! உலகத்தை ஒவ்வொரு காலத்தில் உயர்வுறச் செய்தவர் ஒருவர் இருவரேயன்றி எண்ணிக்கைக்குத் தலைகாட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கும் கும்பல்களல்ல. இந்தக் கும்பலை இருகூறாக்கி இதனில் அதிகமான கூறே கொள்ளத்தக்கதென் றுரைப்பது நகைப்பே விளைகின்ற நிலமல்லது வேறன்று.


ஒட்டக்கூத்தர் பாடிய

**தக்கயாகப் பரணி**

மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

(உரையுடன்)

இதுவரையில் அச்சேறாத இவ்வரிய நூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம் :—கலாநிலயம் : 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.




# அப்பர்

## அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்.

### 12. இரத்தினப் பரிட்சை.

[704-வது பக்கத்தொடர்ச்சி]

(iii) நவரத்தினங்களில் உள்ள குணங்களும், குற்றங்களும், அவற்றின் பயனும்:—

I. வயிரம்:—இதன் குணம் வானவில்லைப்போல் * எழுவகை நிறங்களுடைய சுடரொளிகளை வீசுதல். அவ்வாறு வீசுவனயாவும் வயிரமல்ல.

"பலகை யெட்டும் கோண மாறும்
இலகிய தாரையும் சுத்தியும் தராசமும்
ஐந்து குணமென் றறைந்தனர் புலவர்,
இந்திர சாபத் திகலொளி பெறினே" என்னும்

சூத்திரத்தால், போலி வைரங்களுக்கும் இதற்கும் உள்ள பேதத்தைக்காணலாம். †பலகைகளுங் கோணங்களுமே வயிரத்தின் சீரை விளக்குவனவாம். "வயிரப் பலகை"களை அப்பர் ‡ குணமறிந்து உவமைப்படுத்தும் சொற்றொடர்களை அடியிற்கண்ட பாசுரங்களிற் காண்க:—

அலைபடுத்த பெருங்கடனஞ் சமுதா வுண்டு
அமரர்கடந் தலைகாத்த வைபர் செம்பொற்
சிலையெடுத்து மாநாக நெருப்புக் கோத்துத்
திரிபுரங்க ளெயிட்ட செல்வர் போலு
நிலைபடுத்த பசும்பொன்னுன் முத்தா னீண்ட
நிரைவயிரப் பலகையாற் குவையார்த் துற்ற
மலைபடுத்த மழபாடி வயிரத் தூணே!
யென்றென்றே யானரற்றி நைகின் றேனே.

திருமழபாடி - திருத்தாண்டகம் 1.

நன்றருளித் தீதகற்றும் நம்பெருமான்போல் மின்னும். ¶ வயிரம் இருட்டில் பிரகாசம் தரும். இதை அப்பர் "கடுவிருட் சுடரொப்பான்" எனச் சிவபெருமானுக்கு உவமானம் கூறுகின்றார்:—

விண்ணிடை மின்னொப் பானை
மெய்ப்பெரும் பொருளொப் பானைக்
கண்ணிடை மணியொப் பானைக்
கடுவிருட் சுடரொப் பானை
எண்ணிடை யெண்ண லாக
விருவரை வெருவ நீண்ட
அண்ணலை நினைந்த நெஞ்ச
மழகிதா நினைந்த வாறே

நினைந்த திருநேரிசை 9.

இதைத் தழுவியதுபோல் சம்பந்தரும்,

முதுசினவி லவுணர்புர மூன்றுமொரு
நொடிவரையின் மூளவெரி செயச்
சதுரர்மதி பொதிசடையர் சங்கரர்வி
ரும்புமலை தன்னை வினவில்
எதிரெதிர வெதிர்பிணைய வெழுபொறிகள்
சிதறவெழி லேன முழுத
கதிர்மணியின் வளரொளிக ளிருளகல
நிலவுகா ளத்திமலை யே!

சம்பந்தர் - திருக்காளத்தி - பண் - சதாரி 2.

இத்தகைய வயிரத்திற்கு நால்வகை *வருண முண்டாம்! அந்தணன், அரசன், வைசியன், சூத்திரனென்னும் நாற்குலமென்றும், அந்நால்வகையின் ஒளியாவன; "அந்தணனன் வெள்ளை; யரசன் சிவப்பு, வந்த வைசியன் பச்சை, சூத்திரன் அந்தமில் கருமையென் றறைந்தனர் புலவர்." அவற்றின் பயன் அணிவோர்க்கு யாதெனின்:—

"மறையோ ரணியின் மறையோ ராகிப்
பிறவி யேழும் பிறந்துவாழ் குவரே" என்றும்,
"மன்னவ ரணியின் மன்னவர் சூழ
விந்நில வேந்த ராவ ரெழுபிறப்பும்" என்றும்,
"வணிக ரணியின் மணிபொன் மலிந்து
தணிவற வடைந்து தரணியில் வாழ்வர்" எனவும்,
சூத்திர ரணியிற் றொகையர் கனகநெல்
வாய்ப்ப மன்னி மகிழ்ந்துவாழ் குவரே" எனவும்,

வருவது காண்க. பொன்னில மாதராசை பொருந்தினோர், சூத்திரவருண வயிரத்தையும், ஏழுபூமியும் கடந்து துரியபூமிக்குச் செல்ல விரும்புவோர், அந்தணவருண வயிரத்தையும் அணிவாராயின், அவை அவர்களுக்குத்தக்க துணைக்கருவிக ளாகுமென்பர்.

---

* ஊனிகந்தூ ணுறிகையர் குண்டர் பொல்லா
ஊத்தைவாய்ச் சமண ருறவாக் கொண்டு
ஞானகஞ்சேர்ந் துள்ள வயிரத்தை நண்ணு
நாயேனைப் பொருளாக வாண்டு கொண்ட
மீனகஞ்சேர் வெள்ளநீர் விதியாற் சூடும்
வேந்தனே! விண்ணவர்தம் பெருமான் மேக
வானகஞ்சேர் மழபாடி வயிரத் தூணே!
யென்றென்றே யானரற்றி நைகின் றேனே.

திருமழபாடி - திருத்தாண்டகம் 4.

†..."போற்றிநெற் குணந்தாரைச் சுத்தி நோன்மை
புரந்தரசா பம்பலகை யெட்டு மிக்க
ஏற்றமுடை கோணமா றெனவைந் தாம்..."

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்.

‡ கலையானைப் பரசுதர பாணி யானைக்
கனவயிரத் திரளானை மணிமா ணிக்க
மலையானை யென்றலையி னுச்சியானை
வார்தருபுன் சடையானை மயான மன்னும்
நிலையானை வரியரவு நாணாக் கோத்து
நினையாதார் புரமெரிய வளைத்த மேருச்
சிலையானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே.

திருவானைக்கா - திருத்தகண்டகம் 6.

¶ துலங்க ளென்செய்வ? துற்றங்க ளென்செய்வ?
துலங்கி நீநின்று சேர்ந்திட நெஞ்சமே!
இலங்கு சேறையிற் செந்நெறி மேவிய
அலங்க னருள ரஞ்சுவ தென்னுக்கே?

திருச்சேறை - திருக்குறுந்தொகை 8.

* நன்றருளித் தீதகற்று நம்பிரான்கா
ணன்மறையோ டாறங்க மாயி னான்காண்
மின்றிகழும் சோதியன்கா ணாதி தான்காண்,
வெள்ளேறு நின்றுலவு கொடியி னான்காண்
துன்றுபொழிற் கச்சியே கம்பன் றான்காண்,
சோற்றுத் துறையான்காண் சோலை சூழ்ந்த
தென்றலார் மணங்கமழுந் திருவா ரூரிற்
றிருமூலட் டானத்தெஞ் செல்வன் றானே.

திருவாரூர் - திருத்தாண்டகம் 7.

இத்தன்மைகளையுடைய வயிரம் முதலிய ரத்தினங்களைத் தனது அலையிலடித்துவரும் *திவ்ய நதிகளும்† தமதிடத்தில் குளித்துமூழ்கு மடியாருக்குச் சிவத் தன்மைவிட்டு நீங்கா ‡ மன உறுதியும் தருமென்பது ஆன்றோர் கருத்தாம்.$

இனி வயிரங்களிடத்திற் காணப்படும் குற்றங்கள் யாவை? அக்குற்றங்களுடைய வயிரத்தை அணிவோர் படுந்துன்ப மெவை, யென்னுமிவைகளைச் சற்று நோக்குவோம்.

குன்றுதலையுடையதென்று வயிரத்தில் வரைந்து நூலோராற் சொல்லப்பட்ட குற்றம் பன்னிரண்டு. ¶ அவையாவன:—

" சரைமலங் கீற்றுச் சப்படி பிளத்தல்
துளைகரி விந்து காக பாத
மிருத்துக் கோடிக ளிலாதன முரிதல்
தாரை மழுங்கல் தன்னோ
டீராறும் வயிரத் திழிபென மொழிப"

இப்பன்னிரண்டு குற்றங்களில் மிகவும் கொடியவை நான்கே. அவை காகபாதம், களங்கம், விந்து, ஏகை என்பன. ஏகை என்பதை இரேகை என்றும், கீற்று என்றும் மொழிவர். இக்குற்றங்களின் பயன் வருமாறு:—

(1) "காக பாத நாகம் கொல்லும்
(2) "மலம் பிரியாதது நிலந்தரு கிளைகெடும்" †
(3) "விந்து சிந்தையிற் சந்தா பந்தரும்"
(4) "கீற்று வரலினை ஏற்றவர் மாய்வர்"

இத்தகைய தோஷங்கள் உள்ள ‡வயிரங்களைச் சுத்திசெய்வோர் அக்குற்றம்வரையில் கூடுமானபாகத்தை ¶அறுத்து எறிவர். இதை யெண்ணியோ, அப்பரும்,

"மாசார் பாச மயக்கறு வித்தெனுள்
நேச மாகிய நித்த மணாளனைப்
பூச நீர்க்கரு வாய்க்கரைத் தென்புத்தூர்
ஈச னேயென வின்பம தாயிற்றே.
திருக்கருவாய்க் கரைப்புத்தூர் - திருக்குறுந்தொகை 8.

II. மரகதம்:—பச்சையின் குணங்கள், கிளி மயிற் கழுத்து நெல்லிளம்பயிர் பொன்வண்டு பொன் இவை போன்ற தன்மைகளுடன் பச்சென்று விளங்குதல், முதலியன:--

"நெய்த்தல்கிளி மயிற்கழுத் தொத்தல் பைம்பயிரிற்
பசத்தல் பொன்மை தன்னுடன் பசுத்தல்
பத்தி பாய்தல் பொன்வண் டின்வயி
றொத்துத் தெளிதலோ டெட்டுங் குணமே"

உமையுடன்கலந்தஉருவினராதலால் சிவபெருமான் திருவுருவம் மரகதவொளியுடன் விளங்குமென்பார்.

"பச்சைமேனியர் பிச்சை கொள்பவர் பட்டினத்
[துறைபல்லவனீச்சரத்
திச்சை யாயிருப்பா ரிவர்தன்மை யாறறிவார்"
சம்பந்தர்—பல்லவனீச்சரம்-பண்-பழம்பஞ்சுரம் ஈரடி 6.

மரகதத்திற்கு (அதாவது பழம்பச்சையென்பதற்கு) ஜாதி யொன்றே. இதற்கு குற்றங்கள் * எட்டுள. அவை :—

" கருகுதல் வெள்ளை கன்மணல் கீற்றுப்
பொரிவு தராச மிறுகுதல் மரகதத்
தெண்ணிய குற்றம் இவையென மொழிப."

இவற்றுள் மூன்று குற்றங்களே பெரும்பாலும் கவனிக்கப்படுவன. அவை இரைகை அதாவது கீற்று ஒன்று, இருள் என்னப்படும் கருகுதல் ("கருகல்" குணம்) மற்றொன்று; தார் அல்லது மாலைபோல் உருவிற் காணப்படுவது மூன்றாவது. இக்குற்றங்களின் றேல், ஏனைய கவனியாதும் விடலாகும். "பச்சை மேனியார்", கருக்குமணி மிடறுடையாரென்று வஞ்சகப் புகழ்ச்சியாய்ச் சிவபெருமானை யடியார் பாடுவதுமுண்டு$:—

---

*மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயிரம்மேபொரு துந்தி [டுறையுள்
மின்னார் பெண்ணைத் தென்பால் வெண் ணெய் நல்லூரருட்
அன்னே யுனக் காளாயினி யல்லேனென லாமே
சுந்தரர்.

†"தணியார்மதி யரவின்னொடு வைத்தானிட மொய்த்தெம்
பணியாயவ னடியார்தொழு தேத்தும்புள மங்கை
மணியார்தரு கனகம்மவை வயிர்த்திர ளோடும்
அணியார்மண லணைகாவிரை யாலுந்துறை யதுவே"
சம்பந்தர்.

‡ வரைசார்ந்த வயிரத்திரண் மாணிக்கந்
திரையார்ந்த புனல்பாய் கெடிலக்கரை
விரையார் நீற்றன் விளங்கிய விரட்டம்
உரையே னாகிலென்கண் டுயில்கொள்ளுமே.
திருவதிகை-திருக்குறுந்தொகை.

$ பகைச்சுடராய்ப் பாவ மறுப்பான் றன்னைப்
பழியிலியாய் நஞ்சுண் டமுதீந் தானை
வகைச்சுடராய் வல்லசுரர் புரமட் டானை
வளைவிலியா யெல்லார்க்கு மருள்செய் வானை
மிகைச்சுடரை விண்ணவர்கண் மேலப் பாலை
மேலாய தேவாதி தேவர்க் கென்றும்
திகைச்சுடரைத் தென்கூடற் றிருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே.
திருவாலவாய்—திருத்தாண்டகம் 9.

¶ கீற்றுமலஞ் சப்படியே பிளத்தல் கோடி
கெடுதல்கரி துளைவிந்து காக பாத
மாற்றருஞ்சீர் தருகோடி முரிதல் தாரை
மழுங்கலிருத் தெனப்பகர்வார் குறையீராறும்.
திருவாலவாயுடையார்-திருவிளையாடற் புராணம்.

† மலர்தாங்கிய பாசப்பிறப் பறப்பீர் துறைக்கங்கைச்
சலந்தாங்கிய முடியானமர்ந் திடமாந்திருச் சுழியல்
நிலந்தாங்கிய மலராற்கொழும் புகையாணினைந் தேத்தும்
தலந்தாங்கிய புகழாமிகு தவமாஞ்சது ராமே.
சுந்தரர்.

‡ முன்னவன் னுலகுக்கு முழுமணிப் பொன்னவன்
றிகழ்முத்தொடு போகமாம்
மன்னவன் றிருமாற்பேறு கைதொழும்
அன்னவரெமை யாளுடையார்களே.
திருமாற்பேறு-திருக்குறுந்தொகை 8.

¶ " முத்தினை, முழுவயிரத்திரண் மாணிக்கத்
தொத்தினைத் துளக்க மிலாத விளக்காய
வித்தினை, விண்ணவர் தாந்தொழும் வெண்ணியில்
அத்தனை யடையவல்லார்க் கில்லை யல்லலே"
சம்பந்தர்

* "கருகல்வெளி றொடுபொரிவே கல்லே மணலே
காற்றிலுந் தராசமொடு குற்ற மெட்டா, மரகதம்"...
திருவாலவாயுடையார் - திருவிளையாடற்புராணம்.
25-மாணிக்கம்விற்ற திருவிளையாடல் 21.

$ கருத்துமணி மிடறன் கதநாகங் கச்சையினன்
உருக்கு மடியவரை பொளிவெண் பிறைசூடி
அரக்கன் றிறலழித்தா னணியாப்ப னூரானைப்
பருக்கு மனமுடையார் வினைபற் றறுப்பாரே.
சம்பந்தர்.



இசை விளங்குமெழில் சூழ்ந்தியல் பாகத்
திசைவிளங்குபொழில் சூழ்திருப் புத்தூர்
பசைவி ளங்கப் படித்தாரவர் போலும்
வசைவி ளங்கும்வடி சேர்நுத லாரே
சம்பந்தர்.

கணிவளர் வேங்கை யோடு கடிதிங்கள்
கண்ணி கழல்கால் சிலம்ப வழகார்
அணிகிள ரார வெள்ளை தவிழ்தண்ண
வண்ண வியலா ரொருவ ரிருவர்
டணிகிளர் மஞ்சையால மழையாடு
சேரலை மலையான் மகட்கு மிறைவர்
அணிகிளர் அன்ன வண்ண மவள்வண்ண
வண்ண மவர்வண்ண வண்ண மியல்பே
அப்பர்-சிவனெனு மோசை 6.

# மாதவி மாதவம்

[706 - வது பக்கத் தொடர்ச்சி]

ஆதிமுதல்வன் பாதபீடிகையால்
மாதவிமகள் தன் பழம்பிறப் புணர்ந்தமை.

ஆங்கே மணிபல்லவத்துத் தெய்வமாதால் எடுத்து வரப்பெற்ற மணிமேகலை துயிலெழுந்து, தன்னருகே சுதமதியும் விஞ்சைமாதும் இன்றித் தனியாயிருப்பதை யுணர்ந்து, துணுக்குற்ற நெஞ்சினளாய்த் தன் தோழியைப் பலமுறை கூவினாள். அஃது அவலமே யாயிற்று. தான் இருக்கும் இடமும் முன்பு காணாத தொன்றாக இருப்பதைக் கண்டாள். யாண்டும் இருள் சூழ்ந்து அவட்குப் பேரச்சம் விளைத்தது. ஆதலின் அச்செல்வச்சிறுமி அவலித்துஅரற்றி நின்றாள். காலை ஞாயிறு கதிர்விரித்து முளைப்ப, ஒவ்வோரிடமாகத் துருவிச் சென்றுதேடியும் சுதமதியைக் காணவியலாது போகவே "சுதமதி, ஒளித்தாய்; துயரஞ் செய்தனை. உவவனமருங்கின் ஓரிடங்கொல் இது? நனவோ கனவோ என்பதை யறியேன்; மன நடுக்குறாஉம், மாற்றந்தாராய். வல்லிருள் கழிந்தது மாதவி மயங்கும், மெல்வளை வாராய்; விட்டகன்றனையோ? விஞ்சையிற்றோன்றிய விளங்கிழைமடவாள், வஞ்சஞ் செய்தனள்கொல்லோ அறியேன். ஒரு தனி யஞ்சுவென் திருவே; வா" என மீண்டும் தேடினள். அந்தோ, அவள் தோழியோ, மற்றொருத்தியோ யாண்டுங்காணப்பெறவில்லை. துயர்கைமிக்க நெஞ்சினளாய்த் தன் தந்தையையுள்ளி "எம்மிதிற் படுத்தும் வெவ்வினை யுருப்பக், கோற்றொடி மாதரொடு வேற்று நாடடைந்து, வைவாள் உழந்த மணிப்பூணகலத்து, ஐயாவோ!" என்றழுதாள். அவ்வமயம் அவள் தான் நிற்றற்குச் சிறிது முன்னே, பெருந்தவமுனிவன் (புத்தன்) இருந்தற முரைக்கும் தருமபீடிகை விரிந்திலங் கவிரொளிசிறந்து கதிர்பரப்பித்தோன்றக்கண்டாள். கண்டதும் தலைமேற்குவிந்தகையளாகி, மெய்மயிர் பொடிப்பக்கண்ணீருகுத்து, அதனை மும்முறை வலம்வந்து துதித்தாள். ஆ! அப்பீடிகைக் காட்சியால் தன் பழம்பிறப்பு முற்றும் உணர்ந்துநின்றாள். இப்பிறவியில் தன்னைக் காதலித்த உதயகுமரனே சென்ற பிறவியில் தனக்குக் கணவனாயிருந்தவன் என்பதையறிய அவட்கு வியப்புமிக்கது. அதுபொழுது அவளை ஆங்கே சேர்ப்பித்த தெய்வமாது தோன்றி அவளுக்கு வேற்றுரு வெய்தவும், அந்தரந்திரியவும், பசித்துயர் நீங்கவும் மூன்று மந்திரமளித்து, அத்தீவினில் உறைதரும் தீவதிலகையென்னும் மற்றொரு அணங்கை அவளுக்குக் காட்டி மறைந்தாள். அந்தத் தீவதிலகை அமுதசுரபி யென்னும் ஒரு கலனை அவளுக்கு அளித்து, " மாதவி யீன்ற மாதவச் செல்வி! நினக்கி யான் உரைப்ப தொன்றுண்டு; அஃது, குடிப்பிறப் பழிக்கும், விழுப்பங்கொல்லும், பிடித்தகல்விப்பெரும் புணை விடூஉம், நாணணிகளையும் மாணெழில் சிதைக்கும் பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும், பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர், மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை ; மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம், உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே ; நின் கையகத்துள்ள இச்சிரிய பாத்திரம், தன்னகத்திட்ட சிறுசோற்றுத்திரள், வாங்குநர் கையகம் வருத்துதலல்லது, தான் தொலைவில்லாத் தகைமையது. ஆதலின், நின்னகர்ப்போந்து மன்னுயிர்க்கெல்லாம் அறக்கடன் பூண்டு ஒழுகுவாயாக" எனக் கூறிப் பிரிந்தாள். மணிமேகலை தான் இப்பெறலரும்பேறு பெற்றது அறவாழியந்தணன் திருவருட்டிறனேயென மதித்து, அப் பேரருளாளனின் திருவருட்செயலைப் பாடி வாழ்த்தா நின்றாள்.

காமனைக் கடிந்தனை காலனைக் காய்ந்தனை
தேமலர் மாரியை திருமறு மார்பனை
தேமலர் மாரியை திருமறு மார்பனை
மாமலர் வண்ண ! நின் மலரடி வணங்கினம்;
ஆரருள் பயந்தனை யாழ்துய ரவித்தனை
ஓரரு ளாழியை யுலகுடை யொருவனை
ஓரரு ளாழியை யுலகுடை யொருவனை
சீரருண் மொழிபைநின் திருவடி தொழுதனம்;
அலகிலா ஞானத் தகத்த டங்க நுங்கி
அலகிலா ஞானத் தகத் தடங்க நுங்கி
உலகெலா நின்னுள் ஒளித்தாயு நீயே
ஒளித்தாயு நீயே உயிர்க்கெலாங் கண்ணாய்
அளித்தாயுங் காத்தாயு நீயேவாழி யறவேந்தே!;
நிறைதருகோவலத்தோய்நின்னடியார்க்கெல்லாங்
குறைதலி லின்பங் கொடுப்பாயு நீயே
கொடுப்பாயு நீயேயென் குற்றேவல் வேண்டாய்
விடுத்தாயு நீத்தாயு நீயேயென்ற பெருமானே!"

இவ்வாறு துதித்த மணிமேகலை வானூடெழுந்து, " வழுவறு தெய்வம் வாய்மையினுரைத்த, ஏழுநாள் வந்தது என்மகள் வாராள், அந்தோ! அவட்கு நிகழ்ந்த தென்னவோ?" எனக் கண்ணீர்மிக உகுத்துக் கலங்கி நிற்கும், மாதவிமுன்னர் வந்து தோன்றி, அவள் துயர்தீர நிகழ்ந்ததுரைத்தனள். மாதவியும் சுதமதியும் நனிமகிழ்வுற்றனர். பின்னர் தன் அரும்பெறல் அன்னையும் சுதமதியும் உடன்வர, அவ்வூர் அறவணவடிகள் அடியிணை யேத்தி "மறவணநீத்த மாசறு கேள்விப்பெரியீர்! ஆதிமுதல்வன் அறவாழியாள்வோன், மாதுயரெவ்வ மக்களை நீக்கி, விலங்குந்தம்முள் வெரூஉம்

பகைநீக்கி, உடங்குயிர் வாழ்கவென் றுள்ளங் கசிந்து கத் தொன்றுகாலத்து நின்றறமுரைத்த, திருமொழி கேட்கப் பெருவிருப்புடையேம், அருள்க" என்றனள். அதற்கவர் "மடக்கொடி, நின்னால் வருவன இவ்வூர், ஏதுநிகழ்ச்சியாவும் பலவுள; ஆங்கது நிகழ்ந்தபின்னர், பூங்கொடி, நினக்குப் பொருளுரை புகல்வேன். எனினும் நினக்கு இயம்புவேன் ஒன்று,- மக்கள் தேவர் என விருசார்க்கும், ஒத்த முடிவின் ஓரறமாவது, பசிப்பிணி தீர்த்தலாகும்; அதுவே தவப் பெரு நல்லறமாவதாதலின், அதனை முன்னர் புரிக" எனக் கூறி விடுத்தார்.

நரைமுது கணிகையும் அரசிளங் குமரனும்.

மணிமேகலை அணிநகர்ப் புகுந்து, ஆதிரை யென்னும் நிறைசால் செல்வியிடத்துப் பிச்சையேற்று, அதனைப் பலர்க்கும் வழங்கிப் பசிப்பிணி தீர்த்துவந்தாள். காஞ்சனன் என்னும் ஓர் விஞ்சையன்மனைவி, காயசண்டிகையெனும் பெயரினள், ஓர் முனிவரின் சாபத்திற்காளாகி, அதனால், எவ்வகையாலும்தணிக்கவியலாத பெரும்பசியூட்டும் "யானைத்தீ" யெனும் நோயினைப்பெற்று வருந்துபவள் மணிமேகலையின் அறச்செயலறிந்து, அவளிடம் போந்து "அன்னாய்! இட்டதாற்றாக் கட்டழற் கடும்பசிப் பட்டேன் என்றன் பழவினைப்பயத்தால்; நீயோ ஆருயிர்மருத்துவி யென்றறிந்தேன்; துன்னிய என்னோய் துடைத்தருள்க" என்றனள். எடுத்த பாத்திரத்து ஏந்திய அமுதம், பிடித்த கையிற் பெய்தனள் சிறிது; ஆ! வயிறுகாய் பெரும்பசி நீங்கி மற்றவள், துயர நீங்கித் தொழுதனன்! பின்னர் அவணீங்கி, வெயில்சுட வெம்பிய வேய்கரி கானத்துக் கருவி மாமழை தோன்றியதென்ன உலகவறவி புக்கு "அமுதசுரபி யென்னும் அருங்கலன் உடையேன், யாவரும் வருக ஏற்போர்" என்றனள். காணார் கேளார் கான்முடப்பட்டோர் யாவரும் வந்து நிறைந்தனர். அவ் அம்பலமருங்கே உண்போ ரொலியே மிக்கது. இவ்வொலி சித்திராபதியின் செவியகத்தும் ஒலித்தது. "அந்தோ! என் முன்னோரும் யானும் வழுவாது பாதுகாத்து, வேமம்பட்டு விளங்கிய எம்மரபு இங்ஙனம் இடைமுறிந்து வீழ யார்புரிந்த தீவினையோ அறிகிலேன். 'தாய் நான் கடி பாயின் குட்டி எட்டடிபாயும்' என்னும் முதுமொழியெனக்கா வாய்த்தது? அந்தோ! என் மகளாவது பலவாண்டு என் விருப்பிற்கியைய வொழுகினள். இன்பம் இன்னதென்றும் அறிந்தனள். அங்ஙனம் அறிந்த அவளே மீண்டும் அவ்வின்பந் துய்க்க மறுக்கின்றாள். அவள்மகளோ பிஞ்சிற்பழுத்த கனியானாள். அவளை மீட்பது எங்ஙனம்? எனினும் இறைவன் என்னை முழுதுங் கைவிட்டிலன். இன்னும் முயல்வேன்; அவளை யென்வழி திருப்புவேன்" எனக்கூறி உதயகுமரனை யடைந்து, அவன் இணையடியேத்தித் தன் கருத்தை வெளியிட்டாள். அதற்கவன் "நரைமூதாட்டி, மணிமேகலை இதுபொழுது புரிந்துவரும் புதுமைகளை நோக்குங்கால் அவள் ஒரு தேவகன்னியே யாவள்; அவளை யான் விரும்பல் முறையன்று. அஃதன்றி, முன்பொரு நாளிரவு எனது கனவில் ஒரு பொற்கொடி தோன்றி, 'தவத்திறம் பூண்டோள் தன்மேல் வைத்த அவத்திறம் ஒழிக, ஒழியாயாயின், நினக்கோர் தீங்கு நிகழ்வது உறுதி' எனக்கூறி மறைந்தாள். அன்றிருந்து நான் அவள்நினைவை மறந்தேன்" என்றான். அதுகேட்ட சித்திராபதி சிறுநகையெய்தி, "மன்னவர் செல்வ! மண்டமர் முருக்குங் களிறனையார்க்குப் பெண்டிர்கூறும் பேரறிவுண்டோ? எனினும் ஒன்று கிளப்பல்; காமக்கள்ளாட்டிடை மயக்குற்றன, தேவர்க்காயினும் சிலவோ செப்பின்? மாதவன் மடந்தைக்கு வருந்து துயரெய்தி, ஆயிரஞ் செங்கண் அமரர்கோன் பெற்றதும், பிறவும் நினக்கியான் எடுத்தியம்பல் மிகையே; கொண்டோனல்லது தெய்வமும் பேணாப் பெண்டிர்தங் குடியிற் பிறந்தாளல்லள், நாடவர்காண நல்லரங்கேறி ஆடலும் பாடலும் அழகுங் காட்டிக், கண்டோர் நெஞ்சங் கொண்டகம்புக்குப், பண்தேர் மொழியிற் பயன்பல வாங்கி, வண்டிற்றுறக்குங் கொண்டி மகளிரைப் பான்மையிற் பிணித்துப் படிற்றுரை யடக்குதல், கோன்முறையன்றோ?" எனப் பல வஞ்சனை பேசிநின்றாள். அதனால் உதயகுமரன் உள்ளம் பிறழ்ந்து "உன் மொழிப்படி யொழுகுவேன்" என அவட்கு விடையீந்து, தான் ஓர் தேர்மீதிவர்ந்து அம்பலம் புக்கான்.

மன்ன குமரன் காதலும்
மணிமேகலையின் மாய வடிவும்.

அம்பல மருங்கே நம் அருந்தவச் செல்வியைக் கண்ட உதயகுமரன் இடங்கழி காமமோ டடங்கானாகி, "உடம்போடென்றன் உள்ளம் புகுந்தென், நெஞ்சங் கவர்ந்த வஞ்சகக் கள்வி, நோற்றூண் வாழ்க்கையின் நொசிதவந் தாங்கி, ஏற்றூண் விரும்பிய காரணமென்னையோ? சுதமதிமுதலாந் தோழியரின்றித் தானேதமியளாய் நின்ற இவள்முன், யானே சென்று கேட்பல்" என அவள்முன் சென்றான். அவன் வருகையைக் கண்டதும், இதற்குமுன் காணவும் பேசவும் கூசிய மணிமேகலை சென்ற பிறவியில் தனக்கவன் தலைவனானதை யறிந்தமையின் அவன்முன் போந்து அவன் இணையடி தொழுது நின்றாள். இச்செயல் இளங்கோவிற்குப் பெருவியப் பளித்தது. தன் தவம் பலித்ததெனத் தருக்குற்று, அவள் தன் முன்கை பற்றி "நல்லாய்! என்கொல் நற்றவம் புரிந்தது?" என வினவினன். அவன் செயலால் நெஞ்சு நடுங்கினளாயினும், வஞ்சம் ஒன்றும் நேராதென்றுன்னினள். "கேட்டது மொழிவேன் கேட்டி; ஐய, பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட் டிரங்கலும், இறத்தலு முடையது, இடும்பைக் கொள்கலம், மக்கள்யாக்கை யிதுவெனவுணர்ந்து, மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்; இனி நீ வேட்டது செய்க" எனக்கூறி, அவன்பானின்றுநீங்கி, அம்பலத்தமவயின் சம்பாபதிகோயிலுட் புக்கு, தன்னுரு மறைந்து, காயசண்டிகையெனுங் காரிகை வடிவுபூண்டு வெளியே போந்தாள். அவ் வஞ்சமறியா அரசிளங்குமரன் சம்பாபதியெனுந் தேவியைநோக்கி "இமையவர் பாவாய்! என் குறை கேளாய்! பவளச் செவ்வாய்த் தவள வாணகையும், அஞ்சனஞ் சேராச் செங்கய னெடுங்கணும், முரிந்து கடைநெரிய வரிந்த சிலைப்புருவமும், குவிமுட் கருவியும் கோணமும் (தோட்டி) கூர்நுனைக் கவைமுட் கருவியுமாகிக் கடிகொளக் கல்விப்பாகரிற் காப்புவலையோட்டி, வல்வாயாழின் மெல்லிதின் விளங்க, முதுக்குறை முதுமொழி யெடுத்துக்காட்டிப், புதுக்கோள் யானை வேட்டம் வாய்த்ததென, முதியாள்! உன்றன் கோட்டம் புகுந்த மதிவாண்முகத்து மணிமேகலைதனை, ஒழியப்போகேன் உன்னடி தொட்டேன், ஆயி



ழையவளை யருளாயாயிடிற், பன்னாளாயினும் பாடு கிடப்பேன்" எனக்கூறி யங்கு வரங்கிடந்தான். அதுபொழுது ஓர் தெய்வம் ஆங்குள்ள ஓர் சித்திரப்பதுமையிற் றோன்றி, "ஏடவிழ்தாரோய்! எங்கோமகள் முன், நாடாது துணிந்து நாநல்கூர்ந்தனை" என்றலும், உதயகுமரன் உள்ளங்கலங்கி, "அங்கவள் தன்றிறம் அயர்ப்பாயென்றே, முன்னோர் தெய்வ முரைத்ததுந் திப்பியம்! பையரவல்குல் பலர் பசிகளையக் கையிலேந்திய பாத்திரந் திப்பியம்! முந்தை முதல்வி யடிபிழைத் தாயெனச், சித்திர முரைத்த இதூஉந் திப்பியம்! இந்நிலையெல்லாம் மணிமேகலையால் பின்னறிவோம்" எனப் பெயர்ந்தனன். அவன் சென்றபின்னர் வேற்றுருக்கொண்ட மணிமேகலை "காவலன் மகனோ காதல் நீங்கிலன்; ஆதலின் அவன் எனை அறியா இவ்வுருவே, ஏற்றதெனக்" கொண்டு, காயசண்டிகையின் வடிவொடு, அணிநகர் தன்னுள் பசிப்பிணி தீர்க்கும் ஓட்டினை யேந்தித் திரிந்தனள். இவ்வருஞ்செயல் நெடுமுடிக்கிள்ளிக்கும் எட்டியது. அவன் மணிமேகலைக்கு வேண்டுவ புரிந்து, மாண்புமிக்க அணங்கு அவளென நாட்டோர்க் குணர்த்தினன். இவையெல்லாம் உதயகுமரன் அறிந்தும் "மதியோரெள்ளினும் மன்னவன் காயினும், மதிமுக நல்லாள்தன்னை யான் மறவேன்" எனக்கூறி அவள் உறையும் அம்பலம் புக்கான். அதுபொழுது, பழவினைப் பயத்தால் ஈராறாண்டு, யானைத் தீயெனும் நோயுற நலியும்,காயசண்டிகையெனுந் தன் மனையாளைப் புகார் நகரத்தே விட்டுப்போன காஞ்சனன் என்னும் விஞ்சையன் தேடிவருபவன், அவ்வூர் உலக அறவியில் வதியும் நமது மணிமேகலையை,தனக்குரியாளென மனக்களிப்புற்று, அவளை யணுகி "என் உயிரே! நின்கை ஓடு ஒன்றே யாயினும் உண்போர் பலரால்; இது மிகப்பெரும் வியப்பே! யானைத்தீயெனும் அரும்பசிகளைய, வானவாழ்க்கையர் அருளினர் கொல்லோ?" எனப் பழமைக்கட்டுரை பல பாராட்டிப் பேசினன். அதனை யவள் சிறிதும் மதியாது, அம்பலம் புக்க அரசிளங்குமரனை யணுகி, ஆங்கேயுள்ள ஓர் நரைமூதாட்டியை யவற்குக்காட்டி, "மன்னவர் செல்வ! தண்ணறல் வண்ணந்திரிந்து வேறாய வெண்மணலாகிய கூந்தல் காணாய்." என அவள் முடிமுதல் அடிவரை காட்டி, "பூவினுஞ் சாந்தினும் புலால் மறைத்தியாத்துத், தூசினும் மணியினும் தொல்லோர் வகுத்த, வஞ்சந் தெரியாய்" என்று இளமை நிலையாமையைக் கூறுதல் வழியே உடலின் எளிமையை அறிவுறுத்தி, அவன் கருத்தை மாற்ற முயன்றாள். "எனக்கு மறுமொழிதராது, அயலானொருவனுக்குக் கடைக்கண்காட்டிக் காதல்மொழிகளை மறைமுகமாகக் கூறுகின்றாள். நன்று! நன்று!! என் மனைவியின் நடிப்பு! என்னை மறந்தோ அயலானொருவனைக், காதலனைக்கொண்டனை பாதகி! இன்னும் காண்குவன் உன் கள்ளச்செயல்களை!" என்று தன் மனையாள் வேடம்பூண்டுள்ள மணிமேகலையைத் தன் காதலியென்று கருதி, அவ்வம்பலத்தே ஓர் ஒதுக்கிடத்தே மறைந்திருந்தான் காஞ்சனனென்னுமவ் விஞ்சையன். உதயகுமரனும், "இஃதன்று என்றன் விருப்பிற்கேற்றவமயம்; இரவு வருவல்" எனத் தன் னெஞ்சொடு கூறிச்சென்று, அன்றிரவு தன் கோயில்நீங்கி அம்பலம் புக்கான். அவன் வருகையைக் கண்ட விஞ்சையன், "ஆ! நான் உள்ளியதும் உண்மையே யாயிற்று" எனக் கூறி வெஞ்சினமிக்கு விரைந்துசென்று மன்னகுமரனைத் தன் வாளால் வீசினன். அந்தோ! அவன் துடிதுடித்து வீழ்ந்தானன்றே. பின்னரவ் விஞ்சையன் மணிமேகலையைத் தன் மனைவியெனக்கருதி, அவளைக் கைப்பற்றிச் செல்ல அவளுறைவிடம் புக்கான். அதுபொழுது ஓர் தெய்வம் "அணுகல்! அணுகல்!! விஞ்சைக் காஞ்சன!!! மணிமேகலையவள் மறைந்துருவெய்தினள், காயசண்டிகை தன் கடும்பசி நீங்கி விண்வழிப் போயினள், வெவ்வினை செய்தாய்" என மொழிந்தது. ஆங்கது கேட்டுக் கன்றிய நெஞ்சொடு விண்வழிப் போயினன் விஞ்சையன்.

மணிமேகலையும் மன்னவன் தேவியும்.

நடுயாமத்தே இக்கொடுஞ்செயல் நிகழ்ந்ததறிந்த மணிமேகலை, "அந்தோ! இவ்வுரு அழிக" எனத் தன் மாறுவேடத்தை வெறுத்து நீக்கி, மன்னகுமரன் முன்னர்ச் சென்று "சென்ற பிறவியில், திட்டிவிடமுண நின்னுயிர் போநாள், கட்டழல் ஈமத்தென்னுயிர் சுட்டேன், உவவன மருங்கில் நின்பால் உள்ளம், தவிர்விலேனாதலில் தலைமகள் தோன்றி, மணிபல்லவத்திடை யென்னை யாங்குய்த்துப் பிணிப்பறு மாதவன் பீடிகைகாட்டி, உன் பிறப்பெல்லாம் ஒழிவின்றுரைத்தலின், பிறந்தோர் இறத்தலும் இறந்தோர் பிறத்தலும், அறந்தருசால்பும் மறந்தரு துன்பமும், யான் நினக்குரைத்து நின் இடர்வினை யொழிக்கக், காயசண்டிகை வடிவினளானேன். காதல! வைவாள் விஞ்சையன் மயக்குறு வெகுளியின், வெவ்வினை யுருப்ப விளிந்தனையோ?" எனப் பலவாறு தன்துயர்ப் பெருக்கை யெடுத்தியம்பி யழுதாள். கீழ்த்திசை வெளுத்தது. சம்பாபதியை வணங்குதற்பொருட்டு, அம்பலமடைந்த அந்நகர்ப் பெரியோர்சிலர் ஆங்கு நிகழ்ந்ததைக்கண்ணுற்று,மெய்வியர்ப்ப மனம் நடுங்கி, அதனை அரசற்குணர்த்தினர். அரசன் "யான் செயற்பாலது இளங்கோன்றன்னைத் தான் செய்ததனால் தகவிலன் விஞ்சையன்; மாதவர் நோன்பும் மடவார் கற்பும், காவலன் காவல் இன்றெனின் இன்றால்; மகனை முறைசெய்த மன்னவன் வழியோர், துயர்வினையாளன் தோன்றினனென்பது, வேந்தர்தம் செவியுறுவதன் முன்னம், ஈங்கிவன்றன்னை ஈமத்தேற்றிக் கணிகை மகளையும் காவலிலிடுக" என்றுதன் அமைச்சற்கு ஆணையிட்டான்.மணிமேகலை சிறைவைக்கப்பட்டாள். தனதருமருந்தன்ன ஆருயிர்ச்செல்வன் வெட்டுண்டிறந்தமைக் காற்றாது அழுது புலம்பும் இராசமாதேவி "என்மகன் இங்ஙனம் இறத்தற்கேதுவான கணிகைமகளை யெளிதில் விடேன்" எனத் தன் நெஞ்சொடுகூறி, அரசன் ஆணைபெற்று, மாதவிமகளைத் தன்மனைசேர்த்து, அவட்குப் பலகேடுகள் புரிந்தாள். அறத்தகை முதல்வன் அருளால் அவ்வின்னல்களனைத்தையும் வென்று விளங்கினாள் நம் செல்வி. அஃதறிந்த தேவியார் தன் தவறுணர்ந்து அவளிடம் மன்னிப்பு வேண்டினள். "மாபெருந்தேவி! சென்ற பிறவியில் நினது மகன் நீலபதிவயிற்றில் தோன்றி இராகுலன் என்னும் பெயரொடு என்னை மணந்து வாழ்கையில் திட்டிவிடம் என்னும் கொடிய அரவால் உயிர் பிரிந்தபொழுது, அக்கொடுமையைப் பொறுக்கலாற்றாது, யானும் அவ் ஈமத்தீயிற் பாய்ந்தேன். அன்று, யாங்கிருந்தழுதனை யிளங்கோன்றனக்கு? பூங்கொடி நல்லாய்! பொருந்தாது செய்தனை உடற் கழுதனையோ உயிர்க்கழுதனையோ? உடற்கழுதனையேல் உன் மகன்தன்னை, யெடுத்துப் புறங்காட்டிட்டனர் யாரே? உயிர்க்கழுதனையேல் உயிர்புகும் புக்கில், செயப்பாட்டு வினையால் தெரிந்துணர்வரியது; அவ்வுயிர்க் கன்பினையாயின் ஆய்தொடி! எவ்வுயிர்க்காயினும் இரங்கல் வேண்டும்" என அறிவுரை புகட்டித் தனக்கவள் மாமியாதலின் அவள்தாள் வணங்கினள்.

# தமிழ்ப் பாடம் 138.

[708-வது பக்கத் தொடர்ச்சி]

## நைடதம்—நளன் தூதுப் படலம்

ஒருத்தியா னளனென விருப்ப வுள்ளுறும்
விருப்பினு லொருத்தி யான்வீமன் மாதென
மருக்கமழ் பூந்தொடை சூட்ட மன்னவன்
பொருப்புறழ் தடம்புயம் புளகம் பூத்தவே. 44.

(உரை). உள்உறும் - உள்ளத்தில் எழுகின்ற, விருப்பினுல் - விருப்பத்தினுல், ஒருத்தி - தமயந்தியின் தோழியர்களில் ஒருத்தி, யான் நளன் என - நான்தான் நளன் என்று சொல்லி, இருப்ப - மணமகன்போல் வீற்றிருக்க, ஒருத்தி - வேறு ஒருதோழி, யான் வீமன்மாது என - நான் வீமன் புதல்வி தமயந்தி என்று சொல்லிக்கொண்டு, மரு - வாசனையை, கமழ் - வீசுகின்ற, பூ தொடை - பூமாலையை, சூட்ட - (நளன் என்று வீற்றிருக்கும்) தோழிக்குச் சூட்டவும், மன்னவன் - (இக்காட்சியைக் கண்ணுற்ற) நளமகாராஜனுடைய, பொருப்பு - மலையை, உறழ் - போன்ற, தடம் புயம் - விசாலமான தோள்கள், புளகம் பூத்த - மயிர்க்கூச் செறிந்தன.

விரிவுரை:—நாடோறும் தமயந்தி கன்னிமாடம் வந்தெய்தியதும், அவள்பால் பரிகசம் சில பயில்வது தோழியர் வழக்கமாத லியல்பே. உவவனமருங்கில் உருவெளி எனும் நலத்தினுல் உறவுறப் புல்லியுவந்த கன்னி தன் கோயி லெய்தினுள். உடனே குறும்புடைத்தோழியர் இன்று என் செய்வது என்று சூழ்ந்துமுடிக்குமுன், பேதைக் கிள்ளை, 'வந்தனன் நளன்' என நாடகத்தைத் துவக்கியது. இவ்வாறு ஓராது கிள்ளை துவக்கியதைத் தொடர்ந்து நடத்தும் களிப்பும் சூழ்ச்சியும் உடையவர் அத் தோழியர். அன்னமுரைத்த வன்றுதொட்டு நளனின்மீது நாட்டிய உள்ளத்து அந்த நங்கைக்கு இவர் இங்கொரு மணம் முடிக்கின்றனர். 'நளன் வந்தனன்' என்றது கிளி. வந்தவனுக்கு மணமாலை சூட்டுவதன்றே அடுத்தபடி நிகழ்தற்குரிய கருமம். ஒருத்தி 'நான்தான் நளன்' என்று மாப்பிள்ளைக் கோலத்துடன் ஆசனத்தில் அமர்ந்தாள். மற்றவள், 'நான்தான் வீமன்மகள்' என்று மணமாலையைச் சூட்டி வதுவையை முடித்தனள். இந்நாடகம் நளனுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியைத் தருவது இயற்கையே.

---

மலர்ந்தசெந் தாழைமென் மடலின் மேற்றனக்
கிலங்கிழை யுகிரினு லெழுது பாசுரம்
நலம்பெறக் காண்டலு நண்ண லார்புக
ழுலம்பொரு தோளினு னுவகை யெய்தினன். 45.

(உரை). மலர்ந்த - மலர்ந்த, செம் தாழையின் - சிவந்த தாழையின், மெல் - மென்மையான, மடலின் மேல் - இதழின்மேல், இலங்கு இழை - ஒளிபொருந்திய ஆபரணங்களை அணிந்த தமயந்தி, உகிரினுல் - தனது நகத்தினுல், தனக்கு - தனக்கு (நளனுக்கு), எழுது - எழுதுகின்ற, பாசுரம் - செய்யுள் ஒன்றை, நலம்பெற - நன்ருக, காண்டலும் - பார்க்க நேரவும், நண்ணலார் - பகைவர்களும், புகழ் - புகழ்வதற்குரிய, உலம் பொரு - கல்லையொத்த, தோளினன் - தோள்களையுடைய நளன், உவகை - சந்தோஷத்தை, எய்தினன்- அடைந்தான்.

விரிவுரை:—காமத்தால் நைவாரை மரத்திலும் மலரிலும் முடங்கலும் செய்யுளும், எழுதவைத்து, அச் சொன்னலம் கடந்த சுவையதனில் தாமும் தோய்ந்து களிப்பது கவிவரர் மரபு. ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கிலப்புலமையோர், 'நீ விரும்பியவாறு' (As You like it) என்னும் தமது நாடகமொன்றினில் காதலன் ஒருவனைத் தன் மனங்கவர்ந்த வனிதையின் நலத்தினை பாசுரங்களாக இயற்றி அவைகளை மரத்தினில் பொறித்துப் பாராட்ட வைக்கின்ருர். அக்காதலன் ஆர்லண்டோ என்பவன். ஆர்லண்டோவை வரைந்துகொள்ள ரோஸலிண்டு என்னும் மாதராள் விழைகின்ருள். இடையில் இடையூறுசில நிகழலாக, ரோஸலிண்டு ஆணுடை தரித்துத் தன் தோழி ஸீலியா என்பவளுடன் காடு அடைகின்ருள். இந்த ரோஸலிண்டைத் தேடியவண்ணமா யிருக்கும் ஆர்லண்டோவும் அக்கானகம் எய்தி, மரத்திலும் செடியிலும் காதற் பாசுரங்கள் வரைந்து வரைந்து மனஞ் சிறிது ஆறுநெறி தேடுகின்ருன். காமதேவனுக்குப் பொன்வில்லை அளித்துள்ள ஐரோப்பிய மனம், காதற் பாசுரத்தை மரத்தில் தீட்டிவைத்தது. கரும்பு வில்லையும், சுரும்பு நாணையும், மலர்க்கணையையும் மன்மதனுக்குத் தந்துள நம்புலவர்கள், தாழைமடல் தாமரையிலை யனையவைகளை எழுதுபல கைகளா இழைத்து வைத்தனர். நளனது எழிலைச் சொல்லாலும் சித்திரத்திலும் எழுதி எழுதிக் களிப்பது தமயந்தியின் வழக்கம். இன்று கரந்துவந்துள நளன் அயலே நின்று அவள் எழுதும் பாசுரத்தைக் கண்டுவிட்டான். உள்ளத்திற்பொங்கி மீதிடும் உவகையால் அவன் தோள்கள் பூரித்தன.

---

கானம ரலங்கன் மாலைக்
கடவுளர் விடுப்ப வந்த
பானலங் கடந்த தீஞ்சொல்
பணைமுலைப் பாவை நல்லா
ரூனொடு பழகி நெய்த்தோ
ருமிழ்ந்துவெம் புலவு நாறு
மானவேல் வீம னீன்ற
வனிதையை யினிது கண்டார். 46.

(உரை). கான்-வாசனை, அமர் - சேர்ந்திருக்கின்ற, அலங்கல்மாலை - மாலையை அணிந்திருக்கின்ற, கடவுளர் - தேவர்கள், விடுப்ப வந்த - ஏவியபடி வந்த, பால் நலம் கடந்த - பாலின் சுவையைக்காட்டிலும் மிகுந்த, தீம் - இனிமையான, சொல்லார்-சொற்களை உடையவரும், பணை - பருத்த, முலை - முலைகளை உடையவருமான, பாவைநல்லார் - பதுமைபோன்று அழகிய தேவலோகமாதர்கள், ஊன் ஒடு - பகைவர்களது மாமிசத்தில், பழகி - பழகி, நெய்த்தோர் - இரத்தத்தை, உமிழ்ந்து-கக்கி, வெம்-கொடுமையான, புலவு நாறும்-புலால் நாற்றத்தை வீசுகின்ற, மான - சிறந்த, வேல் வீமன் - வேலை உடைய வீமராஜன், ஈன்ற - பெற்ற, வனிதையை - தமயந்தியை, இனிது கண்டார் - நன்கு கண்டார்கள்.



விரிவுரை:—தமயந்தியை மணக்க நளனும் விழைந்திருப்பானுதலால், தங்களில் ஒருவரை அவள்வரைந்துகொள்ளுமாறு விரகிலாது அவன் தூது சொல்வனே என்ற சந்தேகம் இருந்ததாற்ருன் சேயிறு தூது நீ செல்லவேண்டுமென்று முன் இந்திரன் குறிப்புணர்த்தினுன். எனவே தங்கள் காரியம் சித்திபெற வேண்டுமென்னும் ஊக்கத்தால், இந்திரன் வருணன் அக்னி யமன் ஆயவர் தத்தம்சார்பில் தமயந்தியினிடம் பேசும்பொருட்டுத் தேவகன்னியர்களில் ஒவ்வொருத்தியைத் தூதாகத் தெரிந்து அனுப்பியுளர்.

---

எய்திய மகளிர் தம்மி
லிமையவர் தலைவன் தூதி
யையரி நெடுங்கட் செவ்வா
யணங்கிற்கு மணங்கு போல்வாய்
கொய்துணர் தருவி னீழற்
கோமகன் பணியாற் போந்த
செய்திநீ கேட்டி யென்று
சீறடி வணங்கிச் சொல்வாள். 47.

(உரை). எய்திய - தமயந்தியின் கன்னிமாடம் வந்தடைந்த, மகளிர்தம்மில் - தேவலோகப் பெண்களில், இமையவர் தலைவன் தூதி - தேவர்களின் தலைவனை இந்திரனுக்காகத் தூதுவந்தவள், "ஐஅரி - அழகிய வரிகள் அமைந்த, நெடும்கண் - நீண்ட கண்களையும், செவ்வாய் - சிவந்த வாயையும் உடையளாய், அணங்கிற்கும் அணங்குபோல்வாய் - இலக்குமியின் திருவிற்கே காரணமாகிய ஒரு இலக்குமிபோன்றவளே, (என்று தமயந்தியை அழைத்து) கொய்துணர்-பறிப்பதற்கான பூங்கொத்துக்களை உடைய, தருவின் நீழல்- ஐந்து தருக்களின் நிழலில் இருக்கும், கோமகன்- தேவேந்திரனது, பணியால் - ஏவலில், போந்த-நான் வந்துள, செய்தி-விஷயத்தை, நீ கேட்டி- நீ கேட்பாயாக" என்று-என்று, சீறடி-தமயந்தியின் சிறுபாதங்களை, வணங்கி - பணிந்து, சொல்வாள் - பின்வருமாறு பேசலானுள்.

---

இருவிசும் பொருகோ லோச்சி
யேதிலர்க் கடந்து தேவர்
பரவிநின் றிறைஞ்ச நாளும்
பனிமலர்த் தருவி னீழ
லரியணைப் புறத்து வைகு
மண்ணலுக் கமிர்த மன்னு
யுருவிலா னொருவன் செய்யு
முறுபகை காத்தல் வேண்டும். 48.

(உரை). இருவிசும்பு-பெரியவானுலகில், ஒருகோல் ஓச்சி - தனிச்செங்கோல் செலுத்தி, ஏதிலர்க் கடந்து - பகைவர்களை யெல்லாம் வென்று, தேவர் பரவி நின்று இறைஞ்ச - தேவர்கள் துதித்து வணங்கிநிற்க, பனிமலர் - குளிர்ச்சிபொருந்திய மலர்கள் நிறைந்துள்ள - தருவின் நீழல் - பஞ்சதருக்களின் நிழலில் (அமைந்துள்ள), அரிஅணைப் புறத்து - சிங்காதனத்தினிடம், வைகும் - தங்கி இருக்கும், அண்ணலுக்கு - பெருமையில் சிறந்த இந்திரனுக்கு, அமிர்தம் அன்னுய் - அமிர்தம் போன்றவளே, உருவிலான் ஒருவன் - உருவமில்லாதவனுகிய ஒருவன், செய்யும் - செய்கின்ற, உறு பகை - மிகுந்த பகையினின்று, காத்தல் வேண்டும் - (இந்திரனை) நீ காத்தருள வேண்டும்.

விரிவுரை:—தூதியாகவந்த அவள் பேசும் முறையும் நயமும் மிகப் பெரிது. முதல் மூன்று அடிகளால் இந்திரன் பெருமையை உரைக்கின்ருள். பிறகு அவ்வாறு பெருமையுள்ளவனுக்கு அமிர்தம்போன்றவளே என்று தமயந்தியை விளிக்கின்ருள். பின்னர் வந்தகாரியம் என்ன வென்பதை வெளிப்படையாக விளம்பாமல், உருவிலான் ஒருவனுல் நேரும்பகையினின்று இந்திரனைக்காத்து அளித்தல் வேண்டுமென அவளை இரக்கின்ருள். 'நீ இந்திரனை மணக்கவேண்டுமென்று' வெள்ளையாய் அவள் சொல்லவில்லையாயினும் இதன்பொருள் யாதெனத் தமயந்திக்கு விளங்காதிருந்திராது. ஆயினும் அத்தூதியின் உரைநயத்தை உவந்து பின்னுஞ்சிறிது கேட்க விழைந்தனளாய்த் தன் செவி மறுத்திலள்போலும்.

தமயந்தியின் காதலுக்கு இப்பொழுது இந்திரனேடு இகலி நிற்பவன் நளன். அவன் உருவில்லாதவனுகவும் இருக்கின்ருன். 'உருவிலான் ஒருவன் செய்யும் உறுபகை காத்தல்வேண்டும்' என்று இத்தூதி மன்மதனைக் குறித்துரைத்த சொற்கள் நளனுக்கும் அவளறியாமலே பொருந்தக் கூடியனவாயிருக்கின்றன. ஆதலின் இது ஓராதுரைத்த லணியின்பாற்படும்.

---

எம்மிறை யிளவற் காக
விருங்கடல் கடைந்து வாசச்
செம்மலர்த் திருவை யீந்த
தேவர்வா சவர்க்கு மின்னும்
கைம்மலர் வருந்த விக்குக்
கடல்கடைந் துழலா வண்ணம்
பொம்மல்வெம் முலையா யன்னோர்க்
கின்னருள் புரிதல் வேண்டும். 49.

(உரை). எம் இறை - எமது தலைவனை இந்திரனது, இளவல்கு ஆக-தம்பியாகியஉபேந்திரனுக்காக, இரும் கடல் - பெரிய கடலை, கடைந்து - கடைந்து, வாசம்-வாசனைபொருந்திய, செம்மலர்த்திருவை-செந்தாமரை மலரில் வசிக்கும் ஸ்ரீ தேவியை, ஈந்த - தந்த, தேவர் - தேவர்கள், இன்னும் - இனிமேலும், வாசவற்கும் - தேவேந்திரனுக்காகவும், கைமலர் வருந்த - மலர்போன்ற கைகள் நோவ, இக்குக்கடல் - கரும்புக் கடலை, கடைந்து உழலாவண்ணம் - கடைந்து வருந்தாமல், பொம்மல் வெம்முலையாய் - பருத்தெழுந்து விருப்பத்தை விளைவிக்கின்ற முலைகளை உடையவளே, அன்னோர்க்கு - அந்தத்தேவர்களுக்கு, இன் அருள் - உனது இனிய அருளை, புரிதல் வேண்டும்-தந்து உதவ வேண்டும்.

விரிவுரை:—இந்திரன் உற்ற இடுக்கணைக் களையுமாறு முன்வேண்டிய தூதி இச்செய்யுளால், தேவர்கள் கரும்புக் கடல்கடைந்து உழலாவண்ணம் நீ அவர்களைக் காப்பாய் என்று வேண்டுகின்ருள்.

---

மாயிரு ஞாலந் தன்னின்
மகம்பல வியற்றிப் பெற்ற
மீயுயர் பசும்பொன் னாட்டின்
மேதகு செல்வ மெல்லா
மேயின நின்பா லன்றே
யிமையவர்க் கிறைவன் பானின்
சேயரிக் கடைக்க ணோக்கஞ்
சிறிதருள் புரியின் மாதோ. 50.

(உரை) சே அரி - சிவந்த வரிகளை உடைய, நின் கடைக்கண் நோக்கம் - உனது கடைக்கண்ணின் பார்வையை, சிறிது - சிறிது, சிறிதுஅருள் புரியின் - இந்திரன்பால் செலுத்திச்சிறிது அருள்புரிவாயாயின், மாஇரு - மிகவும் பெரிய, ஞாலம்தன்னில் - பூமியிலே, மகம்பல - யாகங்கள் பல, இயற்றி - செய்துமுடித்து, பெற்ற - இந்திரன் தனதாகப்பெற்ற, மீ - மிகவும்,

உயர் - உயர்ந்த, பசும்பொன் நாட்டின் - பசும்பொன்ஞலாகிய தேவலோகத்தின், மேதகு - பெருமை பொருந்திப, செல்வம் எல்லாம் - எல்லாச்செல்வமும், நின்பால் - உன்னிடத்தில், ஏயினஅன்றே - வந்தடைவது திண்ணமன்றே. (மாதோ - அசை).

விரிவுரை:—ஒன்றினைக் கொடுத்து அதற்குச் சமமானதாகவேனும் உயர்ந்ததாகவேனும் இருக்கின்ற மற்ரொன்றைப் பெறுவதாகத் திறமையுடன் கூறுவது பரிவருத்தனை யணியென முன்னர்ச் செப்பியிருக்கின்றோம். இங்குக் கடைக்கண் நோக்கஞ்சிறிது தந்து பொன்னுலகச் செல்வத்தைப் பெரிது பெறவியலும் என்று காட்டுவது அப் பரிவருத்தனை **அணி ஆகும்.**

# குறுந்தொகை

[714-வது பக்கத் தொடர்ச்சி]

சிறைக்குடி ஆந்தையார்] 168 [பாலை

*பொருளீட்டலின்கண் தன்னை யூக்கி வலிக்கும் நெஞ்சிற்குக் கிழவன், கிழத்தியைவிட்டுப் பிரிதலி னருமையை எடுத்துரைத்தது.*

*மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை*
*இரும்பனம் பசுங்குடைப் பலவுடன் பொதிந்து*
*பெரும்பெயல் விடியல் விரித்து விட்டன்ன*
*நறுந்தண் ணியளே நன்மா மேனி*
*புனற்புணை யன்ன சாயிறைப் பணைத்தோள*
*மணத்தொறுந் தணத்தலு மிலமே;*
*பிரியின் வாழ்த லதனினு மிலமே.*

(உரை). மாரிக்காலத்து(ப்பூக்கு மியல்பினதாகிய) சிறுசண்பகத்தின் கொழுமையான அரும்புகள் பலவற்றை நீர்பெய்த பெரிய பச்சைப் பனையோலைப் பிடகத்தில் ஒருங்கே வைத்துமூடி மிக்க மழை பெய்யும் விடியற்காலத்தில் (மூடியைத்திறந்து) மலரவிட்டாற்போல, நல்ல மாமைநிறம் பொருந்திய தலைமகள் நல்ல குளிர்ந்த மெய்யினள்; நீரைக் கக்டகும் புணையைப்போன்ற வளைந்த சந்தினையுடைய பருத்த மூங்கிலையொத்த அவள்தோள்களைத் தழுவிஅணைக்குந்தோறும் (மேன்மேலும் இன்பம் பயத்தலால்)அவற்றைப் பிரிதல் ஒல்லோம்; அதைக்காட்டிலும் பிரியின் உயிர்தரித்திருத்தல் ஒல்லோம். (ஆகையால் பொருளீட்டும் விருப்பத்தை நாம் விட்டிடுவோமாக.)

**பித்திகம்** - பித்திகை; சிறு சண்பகம்; இதையே சாதிப்பூ என்ப. பனங்குடை - பனவோலையால் பெருந்தொன்னைபோலச் செய்த ஒருவித நீருண்ணும் கலம்; கவிழ்த்த குடையைப்போல உட்கவிந்திருத்தலின் இப்பெயர் பெற்றதுபோலும் —'வேணீருண்டகுடை' (கலித் — 23,9); 'இரும்பனங்குடையின் மிசையும்' (புறம்—177,16); பசுங்குடை - பச்சையோலையாற் செய்தகுடை; பச்சையோலையை வெயிலிலுலர்த்திப் பதப்படுத்திச் செய்த குடை; 'வெயில் வெரி நிறுத்தப் பயிலிதழ்ப் பசுங்குடை' என்றூர் அகத்தும் (37). 'பலவுடன்' என்பதைக் 'கொழுமுகை பலவுடன்' என்றியைக்க. நன்மா மேனி; அன்மொழித்தொகை. புணை - தெப்பம். 'புணையன்ன தோள்,' தொழிலுவமம். நீர்நிலையைக் கடப்பதற்குப் புணைபோலக் காமக்கடலைக் கடப்பதற்குக் காதலியின் தோள்கள் உதவலின்; சாயிறை - இறை - முன்னங்கையும் உள்ளங்கையும் பொருந்துவாய்; the wrist joint. 'பணைத்தோள்' பண்புவமம். மணத்தொறும் - (விகாரம்) மணக்குந்தொறும்.

---

வெள்ளி வீதியார்] 169 [மருதம்

*பரத்தையிற்பிரிந்து மனைக்குமீண்ட தலைவன்பால் ஊடலுற்ற தலைவியை அவன் ஊடலுணர்த்தித் தெளிவிக்க முயன்றதை மறுத்து விலக்கி அவள் புலந்து கூறியது.*

*சுரஞ்செல் யானைக் கல்லுறு கோட்டின்*
*தெற்றென இறீஇயரோ, ஐய, மற்றியாம்*
*நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே;*
*பாணர் பசுமீன் சொரிந்த மண்டைபோல்*
*எமக்கும் பெரும்புல வாகி*
*நும்மும் பெறேஎம் இறீஇயரெம் முயிரே.*

(உரை). உம்மோடு நாம் (முன் கூடி மகிழ்ந்து) நகையாடிய எமது மிகவும் வெண்மையான பற்கள், சுரத்திற் செல்லும் யானையின் பாறையிற்குத்துண்ட கொம்பைப்போல விரைவின் முறிந்திடுவனவாக, எமதுயிரும் எனக்கும் மிக்க துயரத்தைத் தருவதாய் உம்மையும் பெறுது பசுமீன் சொரிந்த பாணருடைய மட்சட்டியைப் போல உடைந்து போகக்கடவதாக.

தெற்றென - கடுக, விரைவாக. வால்-வெண்மை. வால் வெள்-மிகவும் வெள்ளிய. மண்டை - வாயகன்ற மட்சட்டி; இதுபாணருக்கு இரக்குங் கலமாகவும் உண்கலமாகவும் உபயோகப்படும். புறம் 103, 115, 179 பார்க்க. புலவு-வருத்தம், துன்பம்; இங்கு (ஆகுபெயர்) துன்பத்தைத்தரும் பொருள்.

---

கருவூர் கிழார்] 170 [குறிஞ்சி

*வரைவினுக்கிடையீடாக நேர்ந்த தலைமகனது பிரிவு நீட்டித்தவழித் தலைமகள் ஆற்றுளெனக் கவன்று "காதலர் உன்னை மறந்தகன்றூரலர்; விரைய வந்து வரைந்துகொள்வார்" என்று சொல்லிச் சொல்லி அவளைத் தேற்றுகின்ற தோழிக்குத் தலைவி கூறியது.*

*பலருங் கூறுகவஃ தறியா தோரே;*
*அருவி தந்த நாட்குர லெருவை*
*கயனு டியானை கவள மாந்தும்*
*மலைகெழு நாடன் கேண்மை*
*தலைபோ காமைநன் கறிந்தனன் யானே.*

(உரை). நீராட (அல்லது, நீருண்ண) விரும்பிக் குளத்தைத் தேடிச்சென்ற யானை வழியிலே அருவிகள் கொணர்ந்துதந்த புதிய தோகையையுடைய நாணற்கோரையைக் கவளம்போல உண்ணும் மலைகள் பொருந்திய குறிஞ்சி நிலத் தலைவனது நட்பு முடிவு போகாதென்பதை நான் நன்றாக அறிந்துளேன்; அஃது அத்தன்மைய தென்பதை அறியாதவர் பலரும் தம்மனத்துத் தோன்றியவாறு சொல்லட்டும்.

'பலரும்' என்றது தோழியைச் சீற்றத்தால் கூறியது. 'அஃது' என்பது ஈற்றடியிலுள்ள 'கேண்மை தலைபோகாமை' என்பதைச் சுட்டிநின்றது. நாள்-புதுமை, freshness. எருவை-ஒருவகைக் கோரை, நாணல். கயன்-கயம், குளம். மாந்துதல் - உண்ணல்; பெரும்பாலும் நீர்முதலியவற்றைப் பருகுந் தொழிற்கே உரியது. தலைபோகாமை-முடிவு பெறுமை, கடைபோகாமை - "உலகமீக் கூறித் தலைபோகன்மையின்" என்பது புறம், (223).

**இறைச்சி:**—'நீர்குடிக்கச்சென்ற யானை அதை மறந்து எருவையைக் கவளமாக உண்டாற்போலப் பொருளைநாடிச் சென்ற தலைமகன் பிறநாட்டிடை வேறு மகளிரைக்கண்டு காதலித்துத் தன்னை மறந்தொழிந்தான்; இனித் தன்னை வரைந்துகொள்ள வாரான்' என்று தலைமகள் குறித்தாள் என்க.



---

பூங்கண்ணுத்திரையார்] 171 [குறிஞ்சி

*வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிந்த தலைமகனது பிரிவு நீட்டித்தவிடத்து ஆற்றுது வருந்தி வேறுபட்ட தலைமகள் தன்னை மணம்பேசவந்த நொதுமலர் வரவைக்கண்டு கவன்று தோழிக்குரைத்தது.*

*காணினி, வாழி தோழி, யாணர்க்*
*கடும்புன லகன்கரை நெடுங்கயத் திட்ட*
*மீன்வலை மாப்பட் டாஅங்*
*கிதுமற் றெவனே நொதுமலர் தலையே.*

(உரை). புதுவருவாயினையுடைய வேகமாய்ச்செல்லும் புனல் பாயும் அகன்ற கரையையுடைய பெரிய குளத்தில் மீன் பிடிப்பதற்கு வீசிய வலையிலே வேறு விலங்கொன்று அகப்பட்டு வெளித்தோன்றினூற்போல, இப்பொழுது நம் மனைப்புறத்து வந்துதோன்றிய இது யாதோ, நான் அறிகிலேன். என்னை மணங்குறித்து வந்த நொதுமலரொருவருடைய தலைதானே? தோழீ. நீ வந்து காண்பாயாக.

மா-மீனல்லாத வேறொரு விலங்கு. படுதல்-அகப்படுதல், வெளிப்படுதல். 'இது' என்பது பின்வரும் 'தலை'யைச் சுட்டிநின்றது. நொதுமலர் - அயலார், அன்னியர். உண்ணத்தகுந்த மீனைக் குறித்திட்டவலை வேண்டாத வேறு விலங்கொன்றைப் பிடித்துத் தந்தாற்போலத் தலைமகன் வந்து வரைந்து கொள்ளலை வேண்டிநாம் பண்ணிய முயற்சியெல்லாம் வீணுகி ஏதிலனொருவன் மணம்பேச வந்தவருகையாயிற்று என்பாள் 'மீன் வலை மாப்பட்டாங்கு' என்றாள்.

---

கச்சிப்பேட்டு நன்னுகையார்] 172 [குறிஞ்சி

*தலைமகனது வரைவிடைப் பிரிவு நீடியவழி ஆற்றுது வருந்திய தலைமகள் தோழிக்குக் கூறியது.*

*தாஅ வஞ்சிறை நொப்பறை வாவல்*
*பழுமரம் படரும் பையுண் மாலை*
*எமிய மாக வீங்கித் துறந்தோர்*
*தமிய மாக இனியர் கொல்லோ?*
*வேளூர்ப் பொதுவினைக் கோரூர் யாத்த*
*உலைவாங்கு மிதிதோல் போலத்*
*தலைவரம் பறியாது வருந்துமென் னெஞ்சே.*

(உரை). வலிபொருந்திய அழகிய சிறகையுடைய நொந்து பறக்கு மியல்பினதாகிய வௌவால் பழுத்தமரத்தை நோக்கிச் செல்லும் (துணை பிரிந்தார்க்கு) துன்பந்தருவதாகிய மாலைப்பொழுதில் தனியே எங்களை இங்குவிட்டு அகன்றவராகிய காதலர், நாம் தனித்துத் துன்புறுவேமாக, தாம் இன்புற்றிருக்கின்றனர் கொல்லோ. வேளூர்ப் பொதுவினைக்காக ஒரூரிலே கட்டப்பட்ட உலைவாங்கும் மிதிதோலைப் போல முடிவின்றி (ஓய்வின்றி) குற்றுயிர்த்து எனது நெஞ்சம் வருந்துகின்றது.

தா - வலி, நொ - துன்பம். பழுமரம் - ஆலமரமுமாம். எமியம், தமியம், ஒருபொருளன-"வேளூர் ......மிதி தோல் போல—"இத்தொடரின் பொருளும் உவமானத்தின் பொருத்தமும் நன்கு தெளியக்கூடவில்லை.

---

மதுரைக்காஞ்சிப்புலவனுர்] 173 [குறிஞ்சி

***தோழியைக் குறையிரந்து பின்னின்ற தலைமகன் அவளால் குறைமறுக்கப்பட்டபோது இனி மடலேறுதலே செய்திறனென்று அவளுக்குச் சொல்லியது.***

*பொன்னே ராவிரைப் புதுமலர் மிடைந்த*
*பன்னூல் மாறைப் பனைபடு கலிமாப்*
*பூண்மணி கறங்க வேறி நாணடப்*
*பழிபட றுன்னேப் வழிவழி சிறப்ப*
*இன்னுள் செய்த திதுவென முன்னின்*
*றவன்பழி நுவலு மிவ்வூர்*
*ஆங்குணர்ந் தமையினீ ரேகுமா ருளனே.*

(உரை). அழகிய பொன்னுவிரையின் புதுமலர்களைப் பல நூலாற் கட்டிய மாலையை அணிந்த பனங்கருக்காற் செய்த குதிரையின்மேல், பூண்ட எலும்புமாலை ஒலிக்கும்படி ஏறித் தெருவழியே சென்று, வெட்கம் தன்னை வருத்தவும், பழிபடர்வதற்குக் காரணமான காமநோய் மேன்மேலும் வளரவும், (ஊரார்) முன்னின்று இவ்வாறு என்னை மடலேறச்செய்தவள் இன்னவளென்று தலைமகளின் பழிக்கிடமான செயலை நான் நுவலக்கேட்டும் இவ்வூர் ஆங்கு அதனையுணர்ந்து மேலொன்றுஞ் சொல்லாமலும் செய்யாமலும் அமைந்திருக்குமாயின், நீர் என்னை ஏற்றுக்கொள்ளாது விட்டகன்று போகத்தக்கவன் ஆவேன்.

ஏர் ஆவிரை. கலிமா-செருக்கிய குதிரை; கலி-செருக்கு, பொன்மா-குதிரை.'வெள்ளுளைக்கலிமான்','கலிமான்வளவ, 'கதழ்பரிய கலிமா' (புறம், 15, 39, 55) என்ற விடத்தெல்லாம் உரையாசிரியர், 'செருக்கியகுதிரை' என்றே உரை கூறியிருக்கின்றூர்; 'கலினமா' என்பதன் குறையெனவுங் கொள்ளலாம். 'புள்ளியற் கலிமா' என்று அகத்தினும் (64) ஐங்குறு நூற்றினும் (181, 186) குதிரைக்கே பெயராய் வந்துளது. பனைபடு கலிமா - மடல் மா; பனைமட்டையாலும் கருக்காலும் குதிரைவடிவமாய்ச் செய்ததோர் ஊர்தி. தான் தீராக்காதல்கொண்டு விரும்பிய மங்கை தன்னைப் புறக்கணித்து மறுத்தபோது காமந்தலைக்கொண்ட காதலன் எருக்கம் பூ மாலை, என்புமாலை முதலியவற்றை அணிந்து தன்னை வருத்திய மடந்தையின் உருவத்தை ஒரு கிழியிலே வரைந்தெடுத்துத் தன் கையிலேந்தி அவளுடைய உற்றூரும் மற்றோருங் காணத் தெருவழியே மடல்மா ஊர்ந்துசெல்லுதல் ஒரு பண்டை வழக்காக அகத்துறை யிலக்கண நூல்களில் கூறப்பட்டிருக்கின்றது. பூண்மணி - மணி - ரத்னம். இங்கே (குறிப்புமொழி) என்புமாலை; அன்றித்தன் வரவை அறிவித்தற்பொருட்டு மடல்மாவின்மேல் கட்டிய மணியுமாம். இன்னுள்; இன்னவள் ; இந்தப்பெண். நுவலும் ஊர் - நான் நுவலுவதற்கிடமான ஊர்; இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மே லேற்றப்பட்டது.

---

வெண்பூதியார்] 174 [பாலை

*தலைமகன் பொருள்வயிற் பிரியலுற்றதைத் தனக்குணர்த்திய தோழிக்குத் தலைமகள் உரைத்தது.*

*பெயன்மழை துறந்த புலம்பறு கடத்துக்*
*கவைமுட் கள்ளிக் காய்விடு கடுநொடி'*
*துதைமென் றூவித் துணைப்புற விரிக்கும்*
*அத்தம் அரிய வென்னுர் நத்துறந்து*
*பொருள்வயிற் பிரிவா ராயினிவ் வுலகத்துப்*
*பொருளே மன்ற பொருளே;*
*அருளே மன்ற யாருமில் லதுவே.*

(உரை). மழைபெய்தலை யொழிந்த சத்தமடங்கிய காட்டில் கவைமுள்ளையுடைய கள்ளி காய்ந்து வெடித்தலால் உண்டாகும் கடிய வொலி, நொருங்கிய மெல்லிய சிறகையுடைய துணையோடுறையும் புறவைப் பயந்தோடச்செய்யும் (காட்டு) வழி கடத்தற்கரியதென்று நினையாராய் நம்மைக் கைவிட்டகன்று பொருளீட்டுங் காரணத்தால் பிரிவாரென்பது உண்மையாயின், நிச்சயமாக இந்த உலகத்தில் பொருளே யாவராலும் நன்கு மதிக்கப்படும் பொருளாகும்,

காதலியர்மாட்டு அருளே தன்னை நன்கு மதிப்பாரெவரு மில்லாத பொருளாகும்.

புலம்பு - ஒலி. சத்தம். கடம் - காடு, சுரம். காய்விடு- காய்ந்து விண்ட, வெடித்த. நொடி - சத்தம். அத்தம்- வழி; அருநெறி. நத்துறந்து-நந்துறந்து; நம்மைத் துறந்து.

---

உலோச்சனார்] 175 [நெய்தல்

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைமக னது பிரிவிடை ஆற்றாளாகிய தலைமகள் தன்னை வற்புறுத் தித் தேற்றுந் தோழிக்குக் கூறியது.

> பருவத் தேனசைஇப் பல்பறைத் தொழுதி
> உரவுத் திரைபொருத திணிமணல் அடைகரை
> நனைந்த புன்னை மாச்சினை தொகூஉம்
> மலர்ந்த பூவின் மாநீர்ச் சேர்ப்பற்
> கிரங்கேன், தோழி, ஈங்கெனல்; ஏன்றும்
> பிறர்பிற ரறியக் கூறல்
> ஆமைத்தாங் கமைக; அம்பலஃ தெவனே.

(உரை). தோழீ, மரங்கள் மலருங்காலத்தில் உண்டாகுந் தேனை விரும்பிப் பல வண்டுக்கூட்டம், மறிந்தலவுந் திரை கள் மோதும் மணல்செறிந்த கடற்கரையிலுள்ள நீர்த்திவ லையால் நனைந்த புன்னைமரத்தின் மலர்ந்த பூக்களையுடைய பெருங் கிளைகளில் ஒருங்குகூடும் கடற்றுறைவனாகிய தலைவ னுக்கு நான் இரங்குகின்றிலேன், என்று சொல்லாதே. (அவனுக்குளதாம் ஏதங் குறித்து நான் இரங்குகின்றேனே யன்றி, எனக்குளதாம் பழிக்கு நாணி நான் வருந்துகின் றேன் அல்லேன்.) மனதில் ஒன்றை உட்கொண்டு எதிலார் பிறரறியக் கூறும் அலர்மொழி எழுமாறு எழட்டும். (அது தான் என்னை என்செய்யும் ?); (சிலரே உணரக் கூறும்) அம்பல் மொழிதான் என்னை என் செய்யும்?

பறை-பறவை; இங்கே வண்டு. 'பல்பறை' என்றது, தும்பி, வண்டு, தேன், ஞிமிறு என்னும் அவற்றின் பல் வேறினங் குறித்து. உரவு - உலவுதல். 'மலர்ந்த பூவின் மாச்சினை' எனக் கூட்டுக. ஈங்கு - அசை. எனல்-என்று சொல்லாதே. பிறர் - எதிலார். பிறரறியக்கூறல் - அலர். கூறல் - (ஆகுபெயர்) கூறும் அலர்மொழி. அலருக்கும் அம் பலுக்கும் உள்ள வேறுபாட்டை 'அம்பலும் அலரும் களவு' (22) என்னும் இறையனார் அகப்பொருட் சூத்திர உரையிற் காண்க.

உள்ளுறை:—'பருவத்தேனசைஇ.....தொகூஉம்மலர்ந்த பூவின் மாநீர்ச்சேர்ப்பன்' என்றமையால், மணத்துக்குரிய பருவத்தையுற்ற தன்னை வரைந்துகொள்ள விரும்பிப் பலரும் தனது தமரையுற்று மணப்பேச வருவார்கள்; அதற்குமுந்தியே தாம் வந்து மணமுடித்துக் கொள்ளலே நன்று எனத் தலைமகனுக் குணர்த்தி வரைவு கடாவுமாறு தோழியைத் தலைமகள் வேண்டினாள் என்க.

---

வருமுலையார் இத்தி] 176 [குறிஞ்சி

தலைமகனுக்குக் குறைநேர்ந்த தோழி வன்மொழிகூறித் தலைமகளைக் குறைநயப்பித்தது.

> ஒருநாள் வாரலன், இருநாள் வாரலன்,
> பன்னாள் வந்து பணிமொழி பயிற்றியென்
> நன்னர் நெஞ்சம் நெகிழ்த்த பின்றை
> வரைமுதிர் தேனிற் போகி யோனே;
> ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
> வேறுபுல னன்னாட்டுப் பெய்த
> வேறுடை மழையிற் கலுழுமென் னெஞ்சே.

(உரை). ஒருநாள் வந்திலன், இருநாள் வந்திலன், பல நாள் வந்து பணிவான மொழிகளைக்கூறி எனது நல்ல மனதை இளகும்படி செய்தபின், வரையினிடத்துள்ள முதிர்ந்த தேனைக் கொணர்வதாகச் சொல்லிச் சென்ற தோன்றல் பிறகு வந்திலன். நமக்குப் பற்றுகும் அவன் யாண் டுள்ளானோ, அறியேன். வேற்றுப்புலனாகிய நல்ல நாட் டிலே பெய்த இடியோடு கூடிய மழையைக்கண்டு அதனால் எனது நெஞ்சம் கலங்கா நின்றது.

தேனின் - தேனுக்கு. ஆசு ஆகு எந்தை, ஆசு - பற்று. 'ஆசாகெந்தை யாண்டுளன் கொல்லோ' என்ற இத் தொடரே புறம் 235-ம் பாட்டு வந்திருத்தல் காண்க. மழை யின் - மழையினால், கலுழும் - கலங்கும்.

---

உலோச்சனார்] 177 [நெய்தல்

எற்பாட்டின்கண், இடைவிட்டொழுகுந் தலைமகன் வந்து சிறப்புறத்து நின்றதை அறிந்த தலைமகள் அவன் கேட்கு மாறு தோழிக்குச் சொல்லியது.

> கடல்பா டவிந்து கானல் மயங்கித்
> துறைநீ ரிருங்கழி புல்லென் றன்றே;
> மன்றலம் பெண்ணை மடல்சேர் வாழ்க்கை
> அன்றிலும் பையென நரலும்; இன்றவர்
> வருவர்கொல், வாழி தோழி, நாகப்
> புலப்பினும் பிரிவாங் கஞ்சித்
> தணப்பருங் காமந் தண்டி யோரே.

(உரை). கடலொலித்தல் அடங்கி, கானல் ஒளியிழந்து, நீர்த்துறையைச்சார்ந்த பெருங்கழி பொலிவழிந்தது. மணம் பொருந்திய அழகிய பனையின் மடலையுற்று வாழு மியல் பினதாகிய அன்றில்களும் மெல்லிய குரலோடு கூவும். தோழீ, நான் விளையாட்டாக ஊடினும், அப்பொழுதுள தாம் பிரிவினையஞ்சித் தவிர்க்கமுடியாத காமத்தைத் தணித்தவராகிய அவர் இன்று வருவார் கொல்லோ?

பாடு - ஒலி. புல்லென்றன்று - புல்லென்றது. நரலும்- கத்தும், கூவும்.

---

நெடும் பல்லியத்தையார்] 178 [மருதம்

வரைந்துகொண்டு கிழவனுங் கிழத்தியும் அமர்ந்த கடி நகர்க்கு அவரைக் காணச்சென்ற தோழி அவனது ஆனாத புணர்ச்சி விதும்பல் கண்டு முன்னர்க் களவுக் காலத்து அவ னொழுகலாற்றை நினைந்து அழிந்து கூறியது.

> அயிரை பரந்த வந்தண் பழனத்
> தேந்தெழின் மலர தூம்புடைத் திரள்கால்
> ஆம்பல் குற்றுனர் நீர்வேட் டாங்கிவள்
> இடைமுலைக் கிடந்தும் நடுங்க லானீர்;
> தொழுதுகாண் பிறையிற் றோன்றி யாநுமக்
> கரியே மாகிய காலைப்
> பெரிய நோகினிர், நோகோ யானே.

(உரை). தொழுது காணப்படும் (கார்த்திகைப்) பிறை யைப்போல அரிதுதோன்றி யாம் உமக்குக் கிடைப்பதற்கரிய ராயிருந்த (களவொழுக்கக்) காலத்து நீர் மிகவும் பொறுத் திருந்தீர். இப்பொழுது, அயிரைமீன்கள் நிறைந்த அழகிய குளிர்ந்த பொய்கையில் எந்திய எழில்வாய்ந்த மலர்களை யுடைய உட்டுளை பொருந்திய திரண்ட தாளையுடைய ஆம் பல்களைப் பறிப்பவர் நீரை யவாவி வருந்தினாற்போல, நினது காதலியுடன் முயங்குமாறு அவளுடனிருந்தும் (புணர்ச்சி விதுப்புற்று வருந்தி) நடுங்கலானீர். இதற்கு நான் என் னென்று வருந்துவேன்?

அயிரை - நுண்மணலுமாம். மலர் - மலர்களையுடைய. தூம்பு - உட்டுளை. ஆம்பல் தண்டு தாமரைத்தண்டு முதலி யவை உள்ளே நீண்ட துளையுள்ளவை. நோன்றல்-பொறுத் தல். நீர்நிலையினகத்திலிருந்து ஆம்பல் பறிப்பவர் நீர்வேட்டு வருந்தினாற்போல மணந்துகொண்ட மனைவியுடன் ஓர



கத்திருந்தும் நீரிவ்வாறு வருந்துவது என்னோ? என்று தோழி நொந்து கூறினாளென்க.

---

குட்டுவன் கண்ணன்] 179 [குறிஞ்சி

வரைந்துகொள்ளாது தலைமகளைப் பன்னாளும் பகலிற் கூடிச் செல்லாநின்ற தலைமகனைத் தோழி இரவுக்குறி நேர் வாள்போன்று பகற்குறி மறுத்து வரைவுகடாயது.

> கல்லென் கானத்துக் கடமா வாட்டி,
> எல்லு மெல்லின்று; ஞமலியு மிளைத்தன
> செல்லல், ஐஇய, உதுவெம் மூரே:
> ஓங்குவரை யடுக்கத்துத் தீந்தேன் கிழித்த
> குவையுடைப் பசுங்கழை தின்ற கயவாய்ப்
> பேதை யானை சுவைத்த
> கூழை மூங்கிற் குவட்டிடை யதுவே.

(உரை). கல்லென்ற சத்தத்தையுடைய காட்டிலே யானை யைத் துன்புறுத்தி வாடச்செய்து சூரியனும் ஒளிமங்கியது; நாய்களும் இளைத்தன. இனி உம்மூருக்குப் போகவேண்டா. உயர்ந்த மலையின் சாரலில் இனிய தேனிறாட்டைக் கிழித்த திரட்சியையுடைய பசிய மூங்கிலை முன்பு(முறித்துத்)தின்ற, அகன்ற வாயையுடைய அறியாமையோடு கூடிய யானை பின்பு சுவைத்துவிட்டதனாற் கூழைப்பட்ட மூங்கிலுள்ள மலைக்குவட்டின் இடையதாய் அதோ தெரிகின்றதே, அது தான் எம்மூர். (இன்றிரவு அங்கேதங்கி நாளை உம்மூருக்குப் போகலாம்.)

கடமா - மதமா, யானை; கடம்-மதம். 'வாட்டி' என்னும் வினையெச்சத்தை 'மெல்லின்று' இளைத்தன' என்ற இரண் டோடும் ஒட்டுக. எல் - ஒளி. சூரியன். உது - உகரச் சுட்டுப் பெயர், குவை - திரட்சி; rotundi-ty.

இறைச்சி:—ஓங்கிவளர்ந்த பசுங்கழையைத்தின்ற யானை இளமூங்கிலைக் கடித்துச் சுவைத்துக் கூழையாக்கிவிட்டு அகன்றாற்போல முன்னமே வேறுமகளிரைத் திளைத்து நல னுண்ட தலைமகன் பின்னர்த் தலைமகளையுங் களவிற்கூடி இன்பநுகர்ந்து வடுப்படுத்தி வரைந்துகொள்ளாது செல் கின்றான் என்று குறிப்பித்ததாம். 'குவட்டிடையது உது எம்மூர்' என்க.

---

கச்சிப்பேட்டு நன்னாகையார்] 180 [பாலை

தலைமகன் பொருள்வயிற்பிரிந்த பிரிவு நீட்டித்தகாலை வருந்தி வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தித் தேற் றியது.

> பழூஉப்பல் லன்ன பருவுகிர்ப் பாவடி
> இருங்களிற் றினநிரை யேந்தல் வரின்மாய்ந்
> தறைமடி கரும்பின் கண்ணிடை யன்ன
> வைக லொருகழை நீடிய சுரனிறந்
> தெய்தினர் கொல்லோ பொருளே, பெருந்தோள்
> அவ்வரி வாடத் துறந்தோர்
> வன்ப ராகத்தாஞ் சென்ற நாட்டே.

(உரை). வன்னெஞ்சராய்த் தமது காதலியின் பெரிய தோ ள்களின் பரவிய அழகிய தேமல்மாய அவளைத் துறந்த தலை வர் ஒருநாளைக்கு ஒரு கோலினளவு தூரமாக நெடிய சுரத் தைக்கடந்து தாம் சென்ற நாட்டில், பேயின் பல்லையொத்த பெரிய நகத்தோடுகூடிய பரந்த அடிமையுடைய பெரிய யானையின் கூட்டத்துக்குத் தலைவனான யானை நடந்து வரும்போது அதனடியால் மிதிப்புண்டு கற்பாறையின்மீது மடிந்து கிடக்குங் கரும்பின் நடுக்கணுவைப்போல இனிய பொருளைப் பெற்றார் கொல்?

பழூஉ - பழு, பேய். பாவடி-பாவு அடி. ஏந்தல்-தலைவ னான யானை. அறை - கற்பாறை. கண்ணிடை-இடைக்கண்; நடுக்கணு. கரும்பின் நடுக்கணு இனிதாயிருத்தலை கரும்பின்

> கடைக்கண் ணனையநாம் ஊரற் கதனால்
> இடைக்கண் ணனையார்க் குரை'—(390)

என்ற நாலடி வெண்பாவால் அறிக. 'கண்ணிடையன்ன பொருள்' என இயைக்க; அன்றி, அறைமடி கரும்பின் கண் ணிடையன்ன பெருந்தோள் அவ்வரிவாட' என்றியைத்துக் கொள்ளினுமாம். வைகல் - நாள், பகல். ஒருகழை - (ஆகு பெயர்) ஒரு கழைத்தூரம் - கழை-மூங்கிற் கோல். அவ்வரி- அம்வரி; அழகிய வரிகள் போன்ற தேமல்.

துறந்தோர், சுரனிறந்து சென்ற நாட்டில் பொருள் எய் தினர் கொல், என முடிக்க.

---

கிள்ளிமங்கலங் கிழார்] 181 [மருதம்

கிழவன் பரத்தையிற் பிரிந்து தன்னைமறந்து தங்கிய வழி ஆற்றாளாகிய கிழத்தியை ஆற்றுவித்தற் பொருட்டுத் தோழி அவனை இயற்பழித்தபோது கிழத்தி இயற்பட மொழிந்தது.

> இதுமற் றெவனோ, தோழி, துனியிடை
> இன்ன ரென்னும் இன்னாக் கிளவி,
> இருமருப் பெருமை யீன்றணிக் காரான்
> உழவன் யாத்த குழவியி னகலாது
> பாற்பெய் பைம்பயி ராரு மூரன்
> திருமனைப் பல்கடம் பூண்ட
> பெருமுது பெண்டி ராகிய நமக்கே.

(உரை). கரிய கொம்பையுடைய ஈன்றணிமைத்தாகிய பெண்ணெருமை, உழவன் கட்டிய தனது கன்றை விட்டக லாது (அதனருகேயிருந்து), தனக்குப் போட்ட பசும் புல்லை உண்ணும் மருதநிலத்தூரனது திருமனைக்குரிய பல காரியங்களையும் செய்யுங் கடமையைப் பூண்ட பெரிய முதிர்ந்த பெண்டிராகிய நமக்கு, கொண்கனிடத்து வெறுப் புண்டாகியபோது அவன் இத்தகையனென்று பழித்துக் கூறும் இன்னாச் சொல்லாகி இது எதற்காக?

இது-பின்வரும் 'இன்னாக்கிளவி' என்பதைச் சுட்டி நின்றது. துனி - நீடித்தவூடல். இருமை - கருமை. காரான் - எருமை; பெண்ணெருமை; எருமைக்காரான் - பண்புத்தொகை. உழவன் - மருதநிலத்து வாழுஞ் சாதியனா கிய அவ்வெருமையின் சொந்தக்காரன். குழவி - எருமை யின் கன்று. பாற்பெய் - தனது பக்கத்திலே (கவனையிலே) இட்ட. பைம்பயிர்-பசும்புல். மகனைப்பெற்றமையால் தனது வீட்டைத்'திருமனை' என்றும், மகனை ஈன்றமையால் தன் னைப் 'பெருமுதுமகள்' என்றும் சொன்னாள்.

உள்ளுறை உவமம்:—இளங்கன்றை ஈன்ற புனிற்றெ ருமை அதை விட்டகலாது பக்கத்திலேயிருந்து உடையவ னிட்ட புல்லைத்தின்பதுபோல, ஈன்றணிமையளாகிய தானும் தன்மகனை விட்டகலாது மனைக்கண்ணிருந்து கண வன் தந்தவற்றை விரும்பி நுகர்ந்து தங்குவதே கற்புக்கடம் பூண்ட மனையாட்டியின் கடமையென்றுகூறி அவனை இயற் பட மொழிந்தாள் என்க.

---

மடல்பாடிய மாதங்கீரனார்] 182 [குறிஞ்சி

தோழியைக் குறையிரந்த தலைமகன் அவள் குறைமறுத் துத் தன்னைச் சேட்படுத்தியபோது தன்னெஞ்சொடு கிளத் தியது.

> விழுத்தலைப் பெண்ணை விளையன் மாமடல்
> மணியணி பெருந்தார் மார்பிற் பூட்டி
> வெள்ளென் பணிந்துபிற ரென்னத் தோன்றி
> ஒருநாள் மறுங்கிற் பெருநா ணீக்கித்
> தெருவி னியலவுந் தருவது கொல்லோ
> கலிங்கவி ரசைநடைப் பேதை
> மெலிந்திலன் நாம்விடற் கமைந்த தூதே.

(உரை). சேலை விளங்கும் மெலிந்த நடையையுடைய பேதையாகிய தோழி இரங்கி நாம் அனுப்ப விரும்பிய தூதினுக்குஇசைந்திலளாகலின் பருத்த(விரிந்த) தலையையுடைய பனைமட்டையாலமைந்த மடன்மாவின் மார்பிற் (கழுத்தில்) மணி யணிந்த பெரிய மாலையைப் பூட்டி நாம் வெள்ளென்பு மாலையை அணிந்து, பெரிய நாணத்தைவிட்டுத் தெருவிலொருநாள் யாவரும் இகழும்படி தோன்றி மடன்மா வூர்ந்துபோதலே இனிச் செய்யத்தக்கதாம்.

விளையல் மடல் - விளைவதாகிய மடல், மாமடல் - மடல்மா; மடலாற்செய்த குதிரை. மார்பில் - மடன்மாவின் மார்பில். நாள்மருங்கு - மருங்கு, ஏழனுருபு. கலிங்கு - கலிங்கம்; சேலை. தூது - தூதுக்கு.

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[711-வது பக்கத் தொடர்ச்சி]

### கூனியை யேற்றிய கோபுர மிதுவோ!

சுல்கச்சூ ளுண்மையை யுன்னி அதனைச் செவ்விதின் நிறைவேற்றுமாறே கைகேயி யாவையும் புரிந்தனள் என்னுந் தன் மதத்தை நிறுவுதற் கியன்றபடி ஸ்ரீமான் சோமசுந்தரபாரதியார் அக்கைகேயி, வாய்மையை உரைத்தலின்றி வரமிரண்டின் வியாஜத்தினுல் பரதனுக்கு அரசும் இராமனுக்கு அடவியும் அடைவித்த நோக்கங்கள் இவையிவையென உரைத்தவை யனைத்தையும் உவந்து கண்டனம். "உண்மையை யரசன்பாலுரைத்து உற்றது செய்யப்புகுவேனுயின், இன்னல்கள் இத்துணை உள; ஆதலின் சம்பரனைத் தொலைத்தநாள் அவனெனக்கு வற்புறுத்தி அளித்த வரங்களைக்கொண்டே அன்னு னறத்தினை முற்றுவிப்பேன்" என்று கைகேயி முன்னும் பின்னும் ஆராய்ந்து தேர்ந்து ஓர் முடிவிற்கு வந்திருப்பாளாயின் ஸ்ரீமான் பாரதியார் ஊகித்துரைப்பதெல்லாம் பெரும்பாலும் பயனும் பொருளுமுடையனவாகலாம். மற்று, இராமாயணநூல்க ளிரண்டும், சிறிதேனுமிதற்கு இடந்தராததுமாத்திர மன்றி அம்முடிவை முற்றிலும் மறுத்து நிற்கின்றனவே. "வரங்களைக் கொண்டு உன் கருத்தினை ஆற்றிக்கொள்" என்று கூனியே முதன்முதல் கைகேயிக்குக் கற்பித்தனள். "உங்கள் குமாரரை உடனே முடிசூட்டிவைக்க வழி தேடுங்கள். உங்கள் சத்துருவைக் காட்டிற் கனுப்பும் உபாயத்தை ஆலோசியுங்கள்" என்று கூனிதன் நெட்டுரையை முடித்ததன் மேலேயே கைகேயி அச் சத்துருவின்பால் அடங்காச் சினம் துடித்தெழ, "இன்றைத் தினமே இராமனை இவ்விடத்திலிருந்து சீக்கிரமாகக் காட்டுக்கு நான் அனுப்பிவிடுகிறேன். எனது புத்திரனை பரதனுக்கே இளவரசுப் பட்டம் இதோ சூட்டிவைக்கின்றேன். எவ்வித உபாயத்தால் இவ்விரண்டையும் எளிதிற் செய்துமுடிக்கலாம்? இராமன் ஒரு பொழுதும் இராச்சியத்தை அடையக் கூடாது; பரதனே அடையவேண்டும் ஆலோசித்துப் பார்" எனப் பகர்ந்தாளென்பது வான்மீகம். இதற்குப் பதிலாய் மந்தரை இவ்விரண்டும் எளிதிற் கைகூடுவதற்குரிய உபாயம் சம்பரவதத்தில் வாங்கிவைத்த வரங்களைப் பயன்படுத்திக்கொள்வதேயாகும் எனச் சூழ்ந்துரைத்தாள். ஆதலின், பரதனைப் பாராளவைப்பதுடனமையாமல் இராமனையும் கானகஞ் செலுத்தவேண்டுமென்று கைகேயி நினைத்த காரணங்களிவையிவை யெனப் பாரதியார் பலபட முயன்று காட்டுவனவெல்லாம் வீணுகின்றன. வரங்களை வியாஜமாக்கொண்டே, மன்னவனுடைய மானமும்நீங்காது அறமும் நிலைக்குமாறுகைகேயி துணிந்தாளென்று பாரதியார் பகர்கின்ற சொற்களெல்லாம் வீணுகின்றன. இராமனைக்காட்டிற்கனுப்ப வேண்டுமென்று நினைத்தவள் கைகேயிஅல்லள். வரங்களைத்தான் வியாஜமாக வைத்து இராமனை அகற்றுவதுடன் பரதனுக் கரசைப் பெறுவிக்கவேண்டுமென்று துணிந்தவளும் கைகேயி அல்லள். ஆதலால், இவை இரண்டுபற்றியும் கைகேசியின் கருத்துக்களென்று பாரதியார் நுனித்துரைத்தவைகளில் ஒன்றும் கைகேயியினது ஆகாது. கூனியின் வேலையிது; உபாயமும் அவளுரைத்ததே.

கம்பரது நூலும் இதனையேதான் வலியுறுத்துகின்றது. வான்மீகத்தில் இயம்பியதுபோல் மந்தரை முதலிலேயே, "உன் சத்துருவைக்காட்டிற்கனுப்பும் வழியைத் தேடு" என்று கம்பருடைய நூலினுள் இயம்புதற்கியலாது. "மறம்நினைந்துமைநலிகிலராயினும்மனத்தால் இறலுறும்படி இயற்றுவ ரிடையறு வின்னல்" என்ற தன்மையில் வாதிக்கின்ற மந்தரை இராமனைக் கைகேயியின் சத்துருவென்றழைத்து அவனை வனம் புகுத்தச் சொல்வாளாயின் அது முழுதும் முரணுமென்று ஓர்ந்து, "பரதன் பட்டம் பெறவேண்டியது இன்றியமையாதது" என்பதை வற்புறுத்துமளவில் நிறுத்திக்கொண்டனள். கூனியின் மொழி வெறும் நிபமேயாக, இமையவர்செய் மாயம் முதலிய காரணங்களால் தூயசிந்தை திரிந்துநின்ற கைகேயி, "எனையுவந்தனை, இனியை என்மகனுக்கும் அனையாய் புனையுநீள்முடிபெறும்படி புகலுதி" என்றுகுறையிரந்தனள். அதன்மேல், அரசன் அருளிய வரமிரண்டையுங் கொண்டு இராமனைக் காட்டிற்குப்போக்கவும் அரசினைப் பரதனுக்கு ஆக்கவும் உபாயங் கற்பித்தவள் உள்ளமுங் கோடிய கொடியாளக் கூனியே. இவ்வண்ணம், கருமமும் அக் கருமத்திற்கேற்ற கருவியும், யாவும் சூழ்ந்துரைத்தவள் கூனியேயாக, கருவியைக்கொண்டு கருமத்தின் நோக்கத்தைக் கைகேயிக்குச் சார்த்துவது எவ்வகையினும் பொருந்தாதிருப்பதை ஸ்ரீமான் பாரதியார்போன்ற அறிஞரே மறக்குமாறு வஞ்சித்து அகல்வித்த பாகம் எதுவெனத் தேர்தல் அருமையாயிருக்கின்றது.

இனி, ஆண்டு பதினான்கென்று இராமனைக் கைகேயி வரையறுத்து அகற்றிவைத்தது ஏனென ஸ்ரீமான் பாராதியார் ஆராய்வதும்,ஆராய்ந்து, "அரசியலவசியத்திற்கு வேண்டுமளவு இராமனைச்சேணிடையகற்றிவைக்க விரும்பினதல்லால் இராமனுக்கு வேறு ஏத மெதுவும் (கைகேயி) கருதினவளில்லை. அன்றிக் கொடுமையொன்றே கருத்தாயின் கைகேயி, என்றும் இராமன் அயோத்தி நாடணுகாவண்ணம் வரம்கேட்டிருக்கலாமே" என்று வாதித்து, "ஆதலின், அரசியன்முறையில் அவசியத்துறையாகமட்டுமே மன்னன் மனையாள் அவன் வனம்போவதை மனங்கொண்டாளென்பது பொதுநோக்குவார்க்கெல்லாம் இனிது போதரும்" எனச் சாதிக்கமுயல்வதும் வியப்பே. ஏனெனில், பதினான்கு வருடம் இராமனுக்கு வனவாசமென்று வரையறுத்தவள் கைகேயியோ அல்லள். "இராமன் காட்டிற்குப்போம்வழியைச்சொல்" என்று வான்மீகத்தில் கேட்கின்றாளே யன்றி, "போய், பதினான்கு வருடம் இருந்து பிறகு திரும்பும் வழியைச் சொல்" என்றுகேட்கவில்லை. "இராமர் பதினான்கு வருடம் காட்டிற்குப்போய் வசிக்கவேண்டும் என்று ஒருவரம் கேளுங்கள்" எனக் கூனி சொன்னதையே கைகேயி இயற்றினாள். எனின், இராமன் வனத்தினின்று மீளலேயாகாது என்று கூனி வரங்கேட்கச் சொல்லியிருந்தால் சூத்திரப்பாவைபோல் அசைந்த கைகேயி அப்படியே கேட்டிருப்பாள். ஆகலால் பதினான்கு வருடத்திற்குப் பின்னேனும் திரும்பிவரக் கூடிய தன்மையனாய் இராமன் நின்றது கூனியின் மொழியினாலன்றிக் கைகேயியின் அன்பினாலன்றென்பது வெளிப்படை. கம்பருடைய நூலினும், இராமனைக் காட்டிற்குப் போக்கவேண்டுமென்ற வரத்தைக் கேட்கச்சொன்ன கூனியே வருடம் பதினான்கென்று வரையறுத்தவளு மாகின்றாள்.

இன்னபடி, பரதன் அரசாளவேண்டுமென்பதும், இராமன் காட்டிற்குப் போகவேண்டுமென்பதும், அதுவும் ஆண்டுபதினான் காகவேண்டுமென்பதும், இவைகளை வரங்களின் உபாயத்தினால் சாதிக்க வேண்டுமென்பதும், யாவுங் கூனியின் கருமங்களாயிருக்க, அவையனைத்தும் கைகேயியின் ஆய்ந்து தேர்ந்த துணிவுகளெனப் பாரதியார் வஞ்சிக்கப் பெற்றாராதலின், இவைகளை அடிப்படையாகக் கொண்டு கைகேயியின் கருத்துச் சுல்கச்சூளறத்தை நிலைநாட்டும் நோக்கத்திலேயே தொடர்ந்ததெனக் காட்ட முயன்றவை அனைத்தும், அதனதனளவில் அழகிய வாக்கியங்களால் மிளிர்கின்றனவேனும், மணல்மேலெழுப்பிய மாளிகைபோல் தளர்ந்து சாய்கின்றன. இவரை ஆட்படுத்திய அவ்வஞ்சனை, படலத்தின் தலைப்புவரையில் கொண்டுய்க்கின்றது. தாம் இன்று பகருமாறெல்லாம் அன்று சிந்தித்தவள் கைகேயி என்ற மருட்கையால், "அறநெறியில் சிந்தை காழ்த்துச் சோர்விலளாய்க் காதற் கற்பற மாற்றிய செவ்வி கருதியன்றோ கம்பர், அவள், "தெரிந்து செயல்வகை"ச் செய்தி கூறும் பகுதிக்கு, அவள் "சூழ்வினைப் படலம்" என்று பொருந்தப் பெயர் புனைந்துள்ளார்? செம்மாந்து செருக்கிய திமிருடைப் பெண்டிரின் தேராச்செயலன்று, தெய்வக்கற்பினள் ஆழ்ந்துசூழ்ந்து தெளிந்து துணிந்த அறவினை கூறும் பகுதி என்பதைத் தலைப்பெயராலேயே நம் கவியரசர் நன்கு அறிவித்துப் போந்தார்" எனப் பாரதியார் இயம்புகின்றனர். மற்று, இரண்டு வரங்களால் இராகவனைப் பதினான்குவருடம் வனமனுப்பிப் பரதனுக்கு அரசு கொடுக்கச் சூழ்ந்த அவ்வளவும் கூனியின் சூழ்ச்சியேயன்றிக் கைகேயியின் சூழ்ச்சியன்றென்றுகாட்டுதற்கே கம்பர் இவைகளை "மந்தரை சூழ்ச்சிப் படலத்தில்" முற்றிலும் அடக்கியிருக்கின்றார் என்னும்தை ஸ்ரீமான் சோமசுந்தரபாரதியார் அயர்ந்தனர். கைகேயி சூழ்வினைப்படலத்தில், கூனி கற்பித்த இக்கருமங்களைக் கைகேயி ஆற்றியவாறென்றே கூறப்பட்டிருக்கின்றது. தெரிந்து செயல்வகையைச் சூழ்ந்தது கூனியே யென்பதைக் குறிப்பதற்கு இப்படலத்திற்கு "மந்தரை சூழ்ச்சி" என்றும், கைகேயி இயற்றுதற் கர்த்தாமாத்திரமே யென்று குறிப்பதற்கு அப்படலத்திற்கு, "கைகேயி சூழ் வினை" என்றும் வேறுபடப் பேர்வைத்திருப்பதே கம்பரது கருத்தை நன்கு புலப்படுத்தும்.

ஆதலால், செயல்வகை தெரிந்து சூழ்ந்தவளுக்கே பாரதியார் உரைக்கின்ற நோக்கங்களெல்லாம் பொருந்தின் பொருந்தலாம். சூழ்ந்தவள் கூனியே என்றபின், மன்னவன் மானத்துடன் அறத்தையுங் காக்கவேண்டுமென்பதும், அதனிற்குச் சுல்கச்சூ ளுண்மையை உரையாமல் முன்னளித்த வரங்களையே கையாளவேண்டுமென்பதும், இராமனை அறவே அகற்றிவிடாமல் பாவம், பதினான்குவருடங்களுக்குப்பின் அயோத்திக்கவன் மீளவேண்டுமென்பதும் கூனியின் நோக்கமென்று கொள்ளவேண்டுமென்பது ஸ்ரீமான் பாரதியார் கருத்தன்றாயினும், கைகேயியைக் கரையிகந்த நல்லவளாக்குமாறு அவர் புரிந்த முயற்சியனைத்தும் மந்தரையையே தூயசிந்தை மாபெரும் மாதராளாய் மாற்றி முடிக்கின்ற விபரீதத்தில் கொண்டுசேர்க்கின்றது. என் நினைத்தார் பாரதியார் என்செய்தார். கவிகளின் இதயத்திற்குமாறாகத்தா னொன்றைக் கற்பனை செய்யவேண்டுமென்பது ஸ்ரீமான் பாரதியாரது கருத்தென் றெவரும் எண்ணார். எனினும், அவர் வாதிக்கின்ற வாசகங்களின் முடிவு இவ்வண்ணம் விபரீதமாவதினின்று கவிகளின் இதயம் அதுவன்றென்று அறிவது முறையேயாகும். அரிச்சந்திரன்தன் மரபிருந்த தயரதன் மகவாசையால் தன் வாய்மையறம் பிறழநினைத்தானென்றும், கோசலையும் தன் மதியின் ஆற்றலால் உரியதாகா அரசை இராமன் அடைவற்கு உடன்பட்டுச் சூழ்ந்தாளென்றும் அவர்களைத் தாழ்த்துவது தக்கதென நினைக்கின்ற பாரதியார் கூனியைக் கொண்டுபோய்த் தூய வாய்மையின் கோபுரத்துச்சியில் வைக்குமிது அவர் நினையாமலே நேர்ந்துவிட்டதோர் நுட்பத்தால் சுவையுடைச் செய்தியென்று செப்பினும் செப்பலாம்.

காரணம் ஒன்று வேண்டாக் கொடுமையோ ரினத்தைச் சேர்ந்தவ ளிக்கூனி என்பதை வான்மீகமுனிவர் செவ்விதின் காட்டுகின்றார். இராமனுக்கு வரவிருக்குந் திருவைக்கண்டு இவ்விழுதை மனத்து மந்தரை அழுக்காறுற்றதல்லால் வேறொன்று மிவளை இந்தச் செயலின்பால் தூண்டியதில்லை. இராமனைத் தொலைக்கும்பொருட்டே இம்மந்தரை பரதனுக் கரசு பயக்குவிக்கும் பகட்டெல்லாம் பகர்ந்தாளல்லது அப்பரதனது ஆக்கத்தில் பரிந்தவளல்லள். இராமன்பாலிவள் வஞ்சினமுடையவளா யிருத்தற்குக் காரணம் யாதும் வான்மீகிமுனிவர் கூறவில்லை. இருவருக்குமோர் பகைமையுமில்லை. நலமுறவாழும் பிறரெல்லாம் தமக்குப் பகைவரே எனப் புழுங்கும் கடையாய தீமையோரில் ஒருத்தி யிவள். இராம பட்டாபிஷேகத்தை மந்தரை கேட்டவுடன், "கொடிய எண்ணமுடைய அவள், தன்னைக் கோபத்தீ முற்றிலுஞ் சூழ்ந்தபடியால்" துயின்றிருந்த கைகேயியை இடித்தெழுப்ப விரைந்தனள் எனப்பகரும் வான்மீகமுனிவர் அக் கோபத்தீ சூழ்ந்ததையே காரணமாக இயம்பி, அக்

கோபம் சூழ்வதற்குக் காரணம் யாதெனக் குறிக்காது விட்டது மானுடத்தன்மையின் பாகுபாடுகளை அவர் எவ்வளவு நுண்ணிதின் உணர்ந்திருக்கின்றாரென்பதற்கு நல்லதோர் சான்ருக நிற்கின்றது. இணையிலா வாழ்வு எய்துகின்றான் ஒருவன் என்பதைக் கேட்டனள், அவனை எவ்வாற்றாலுந் தொலைக்க வேண்டுவதே தன் கடனெனத் துணிந்தாள்.

இதே கருத்தைக் கம்பர் பின்னுஞ் சிறிது நுட்பமாகக் காட்டுகின்றார். பிறர்க்குத் தீமை புரிவதே; தம் தொழிலாகக் கொண்டுள கீழ்கள், தாங்கள் புரியப்புகுகின்ற தீமைக்குக் காரணம் ஏதேனும் ஒன்றிரண்டு தமக்குள்ளே வலிந்து கற்பித்துக்கொள்வது இயற்கை. இதற்கிணங்கக் கம்பர் கூனியை இயக்குகின்றார். அயோத்திமா நகரின் அணிபெறு அமலையால் உறுவதுணர்ந்த வந்தக் கொடுமனக்கூனி,

துடிக்கு நெஞ்சினள்
ஊன்றிய வெகுளியாள் உளைக்கு முள்ளத்தாள்
கான்றெரி நயனத்தாள் கதிக்குஞ் சொல்லினள்

ஆயவாறிதுவெனக் கம்பர் வான்மீகரைப்போல் காட்டுகின்றாரேயன்றி அவள் தான் அத்துணைச் சீற்றமுற்றதன் காரணம் யாதென்பதை முதலிற்கூறவில்லை. ஏனென்னில், எக்காரணமும் இன்றியேயும் இடுக்கண் விளைக்க விரையுங் கொடியோள் இவள். பின் இக் கொடுமையை நிகழ்த்தப்புகுங்கால், எதுபற்றித் தான் இவனைக் கெடுக்கத்தலைப்படுவது எனச் சிறிது தேடத் தலைப்பட்டனள்போலும். காரணம் ஒன்றுந் தென்படாவிடில் தான் மேற்கொண்ட கொடுமையை விட்டுவிடுவதென்பது அவள் கருத்தன்று. தீமையைப் புரிந்தேவிடுவதென்று நிச்சயஞ் செய்துகொண்டாள். அதனோடு தன் பகைக்கு ஒரு காரணமும் தென்படுமாயின் படுக, இல்லையெனில் காரணம் ஒழிக, கருதிய கருமம் மாத்திரம் நிகழ்வதாக, என்பது அவள் எண்ணம். "நீயல்லையாயின் உன்பாட்டன் இந்நீரைக் கலக்கியிருப்பான் காண்" என்றோர் காரணங்கூறியே ஆட்டுக்குட்டியைக் கொன்று தின்னவேண்டுமென்ற கொள்கையுடைய அக் கோனுக்கே உருவினலன்றாயினும் உற்ற குணத்தினல் பெரிதும் உறவுடைய இக்கூனி, "பண்டைநாள் இராகவன் பாணிவில் உமிழ் உண்டை உண்டதனைத் தன் உள்ளத்து உள்ளுவாள்" ஆயினள். அன்று உண்டைவில் உமிழ்ந்த உண்டையை உண்ட செற்றத்தை இன்று பழிதீர்க்க வேண்டுமென்பது அவளுடைய கருத்துச் சிறிதுமன்று. இராமனைக் கெடுக்கவேண்டுமென்பதே அவள் இயற்கைக்குரிய கொள்கை. அது தலையெடுத்த பிறகு மானுட மனத்தின் புன்மைப்பாகம் அவளுக்கு ஓர் காரணம் வலிந்து கற்பித்துத்தந்தது. நெடிது தேடியும் அண்மையிலோர் காரண மகப்படாமையைப் 'பண்டை நாள்' என்பதாலும், பாணி வில்லுண்டையைக் காரணமாகக் கொள்ளாது அதனை நிபமாகவே வைத்தவளாயதை, "தன்மனத் துள்ளுவாள்" என்பதாலும் கம்பர் காட்டுகின்றார். இது வான்மீகர் வகுத்ததற்குள் பின்னுஞ் சிறிது ஆழ்ந்து கம்பர் துருவியதே யல்லாமல் அதனின்று வேறுபட்டதன்று.

இராமனுக் கிடுக்கண் செய்யவேண்டு மென்பது மந்தரையின்கொடியநோக்கம். கைகேயியைக்கொண்டு அது செய்யலாமென் றெண்ணினள். கைகேயி இதற்குடன்படும்பொருட்டுக் காட்டிய வோர் ஊதியமே பரதனுக்குப் பேரரசு பெறவைத்தது. இராமனை அறவே நாட்டினின்று மீளாவகைக் கூனி அங்ஙனம்படி சொல்லாமல் பதினன்கு வருடமென்று வரையறுத்தது அவளுக் கவன்பாலிருந்த சிறு பரிவினலுமன்று. அல்லது கூனியின் கொடுமைக்குமோர் எல்லையுளதென்று எண்ணுவதும் ஆகாது. "மீளாத கானமே இராமனைப் போக்கிவிடுவாய்" என்று தூண்டினல் ஒருகால் அதற்குக் கைகேயி இசையாமல் தன் வஞ்சனையைத் தெரிந்துகொண்டு விடுவாளாயின், பேராசை பெருநஷ்டமாய் முடிந்தால் என் செய்வது என்றஞ்சித்தான் மந்தரை ஓர் காலவரையறை வைத்தனள். கைகேயியின் கருத்தைத் தன்வயம் வளைத்துக் கொண்டு வருகிற இக்கூனி பதம்பார்த்து இணக்கும் சூழ்ச்சித்திறம் மிக உடையவளாதலாற்றான் "இராமனைப் பெருவனத்திடை ஏழிருபருவங்கள் பெயர்ந்து திரிதரச் செய்தி" என்னலானள்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடபல்பொடி நஞ்சன்கூடு.
சோல் ஏஜன்கேள்:-யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்
குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்
டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரு. (1-8-0) பிரான்சு:
டிப்போ, பம்பாய் கல்கத்தா
NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA, NANJANGUD
மதுரை காஞ்சீபுரம்.




# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரீடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜினேன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1 கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10 நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரு. | அ. | ப. | வெளிநாடு | ரு. | அ. | ப |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

## :: அருந்தமிழ் நூல்கள் ::

| | ரூ. | அ. |
|---|---|---|
| மூவர் தேவாரம் அடங்கன்முறை ... | 7 | 0 |
| நாலாயிர திவ்ய பிரபந்தம் ... ... | 4 | 0 |
| இராமலிங்கசுவாமி திருவருட்பா திருமுறை | 7 | 0 |
| நைடதம் மூலமும் உரையும் ... ... | 4 | 0 |
| பட்டினத்தார் பாடல் உரை ... ... | 2 | 0 |
| அருணாசல புராணம் " ... ... | 2 | 0 |
| தாயுமானவர் பாடல் உரை ... ... | 4 | 0 |
| " மூலம் மட்டும் ... | 1 | 8 |
| திருப்புகழ் மெய்ஞ்ஞான விருத்தியுரை ... | 2 | 0 |
| பாராயணத் திருப்புகழ் ... ... | 2 | 0 |
| விநோதரசமஞ்சரி ... ... | 2 | 8 |
| ஸ்ரீபகவத்கீதை (திராவிட மகா வியாக்யானம் | 3 | 8 |
| " வசனம் ... ... | 2 | 0 |
| " (பாகெட் சைஸ்) ... | 1 | 0 |
| நாகம கூளப்ப நாயகன் விறலி விடுதூது | 0 | 12 |
| ஔவை அருந்தமிழ் ... ... | 0 | 12 |

மற்ற எல்லாத் தமிழ்நூல்களும், தேசிய நூல்களும், நாவல்களும், புராணங்களும் எங்களிடம் எப்பொழுதும் கிடைக்கும்.

கே. எஸ். மணியம் அண்டு கம்பெனி,
புஸ்தக வியாபாரிகள்,
இராயப்பேட்டை, சென்னை.



## :: திருக்குறள் ::

மூலமும், சொற்குறிப்பு அகராதியும், விஷய ஒப்புக் குறளும்; வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு.

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300-பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப்படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதன் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

வி. பி. செலவு வேறு. விலை அணா 12.

கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசை, சென்னை.



Estd. **NATIONAL** 1906
**INSURANCE COMPANY LIMITED.**
*Head Office*:-9, **Old Court House St., Calcutta.**

INDIA'S PROBLEMS CAN ONLY BE SOLVED BY INDIANS

INSURE IN AN INDIAN COMPANY MANAGED BY INDIANS, FOR INDIANS

"NATIONAL" IS THE STRONGEST COMPANY MANAGED PURELY BY INDIANS

"NATIONAL" STANDS FOR INDIAN LIFE ASSURANCE

Low rates of premia. Invested Funds over **Rs. 1,47,000,00**

Prompt settlement of Claims. Claims paid exceed **Rs. 67,000,00**

*IT WILL PAY YOU TO ENQUIRE ABOUT AGENCY TERMS Please apply tothe Company to-day.*

**R. G. Das & Co,** OR **Mr. T. A. Anantachari** B.A.
*Managers.* *Branch Secretary,*
*Loane Square, Broadway,*
*Madras.*



# கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி

## பிரசுரங்கள்.

### சங்க நூல்

சென்னைப்பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்
திருவாளர் - கா. ரா. கோவிந்தராஜ முதலியார்
எழுதியது.

தமிழின் அரும்பெரும் செல்வமாய் வாய்த்திருக்கும் சங்ககால இலக்கியங்களைக் கற்பவர்க்கு இணையிலாப் பேருதவி யளிக்கவல்ல இந்நூல் எவ்வெவர் மாட்டும் இருக்கவேண்டியது இன்றியமையாதது. முச் சங்கங்களின் வரலாறும், அவ்வச் சங்கங்களில் பாடப்பெற்ற நூல்களின் தன்மையும், இவையனைய பிறவும் இந்நூலின்கண் விளக்கிஇருக்கக் காணலாம். இத்தகைய அறிவினை யளிப்பதுடன் ஓதுதற்கும் நனி இனிது இந்நூல். தமிழ்ப்பற்றுடையவ ரனைவர் கையிலும் இந்நூலொன்று இல்லாமல் தீராது. சங்க நூல்களைப் படிக்க ஆரம்பிப்பதற்குமுன், இந்நூலைக் கற்றிருப்பாராயின், அச் சங்கநூல்களின் உண்மைப் பொருளையும், அழகையும், பயனையும் உணர்வது எளியதாகும். விலை ரூபா 1—4—0.

### கந்தபுராண வசனம்

வித்வான்
என். வி. முத்துகிருஷ்ண ரெட்டியாரவர்கள்
எழுதியது.

முருகப் பெருமானது திருவவதாரச் சிறப்பினை யுரைக்கும் கச்சியப்பசிவாசாரியார்தம் பெருங்காப்பியமாகிய கந்தபுராணச் செய்யுள்களைத் தழுவித் தெளிவும் இனிமையும் வாய்ந்த செந்தமிழ் வசனநடையில் எழுதப்பெற்றுள இந்நூல், முதனூலின் பெருமையிற் சிறிதுங் குறையாமல், தமிழழகு பூத்துச் சைவசித்தாந்த நறுமணம் வீசிப் பத்தித்தேன் சொட்டி ஞானங் கனிந்த வொரு கற்பகத் தருவிற்கு நிகராகு மென்பதிலையமில்லை. ஆறுமுகமுடைய அருட்பெறும் குமரவேளின் திப்பிய சரித்திரத்தைச் செய்யுள்வாயிலாக ஓதியுணர்ந்து அவர் கருணைக்கு ஆளாகவல்லார் சிலரேயாக, எத்தகையினோரும் எளிதில் படித்துத் தெரிந்து கொள்ளுமாறு வசனநடையில் வரைந்துள இந்நூல் தமிழரனைவர்க்கும் அருமருந்துபோல் அமைந்திருக்கின்றது. (கிளேஸ் பேபர்) விலை ரூபா 2—8—0.

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி
திருவல்லிக்கேணி, :: :: சென்னை.




# வர்த்தமானம்

## தமிழ் நாட்டுப் பலசாலிகள் மகாநாடு.

கீழச்சிவற்பட்டி—அழகாபுரி உடற்பயிற்சிச் சாலையின் சார்பாகப் புரட்டாசி உரு, உசு (அக்டோபர் 11, 12, 1930) சனி ஞாயிறுகளில் இம்மகாநாடு கூடுகிறது. இம்மகாநாட்டில் தமிழ்நாடு கக-ஜில்லாவிலுமுள்ளார் போட்டியில் கலந்து கொள்வார்கள். ராஜா. ஸர். அண்ணாமலை செட்டியாரவர்கள் மகாநாட்டைத் திறந்து வைப்பார்கள். கான்பஹதூர் டாக்டர் சையத் தாஜுடீன் எம். எல். ஸி· அவர்கள் தலைமை வகிப்பார்.

கனம் T. S. ஷெட்டி மெடிகல் ஆபீஸர் கானாடுகாத்தான்; டாக்டர் S. சுப்பிரமணியம், எம். பி. சி. எம். காரைக்குடி; ரெவரெண்ட் ஜே. பேரம், பிரின்ஸிபால், சி. எஸ். எம். ஹைஸ்கூல், புதுக்கோட்டை; S. T. ரெய்னீஸ் பிள்ளை, போலீஸ் கமிஷனர், புதுக்கோட்டை; கான்பகதூர் டாக்டர் சையத்தாஜுடீன் ஆகிய இவர்கள் போட்டிகளைப் பரிட்சை செய்வார்.

வெற்றி பெற்றோர்க்கு வெள்ளிக் கிண்ணம், தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம் முதலிய பரிசுகள் வழங்கப்பெறும். மகாநாட்டின் காட்சி காண விரும்புவோர்க்கு இடமுள்ளவரை இலவசமாகப் பிரவேசச் சீட்டுகள் தரப்படும். உடல்வளம், உடற்கட்டு, உடல் வன்மை, முதலிய போட்டிகள் நிகழும். போதிய சாவகாசமிருந்தால் குஸ்திகளும் நடக்கும் என்று பெரி. சோமசுந்தரன், எழுதுகிறார்.

***

சென்றவாரம் பிரிட்டிஷ் அன்னியநாட்டு மந்திரியான மிஸ்டர் ஹெண்டர்ஸன் "உலக சமாதானம்" என்னும் விஷயமாய் ஜினீவா சர்வதேச மஹாநாட்டில் பேசியதின் சுருக்கம் வருமாறு:—

"இவ்வுத்தேசத்துடன் ஒரு முக்கிய நடவடிக்கையெடுத்துக்கொள்வதற் கடையாளமாகப் பணவுதவி செய்வதான உடன்படிக்கையை ஏற்கப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தயாராக விருக்கின்றனர். ஆனால் யுத்த தளவாடங்களில் குறைவுண்டுபண்ணி வரையறை யுண்டுபண்ணுவதென்ற நிபந்தனையில்தான் சர்வதேசச் சங்க ஒப்பந்தத்தையும் பணவுதவி உடன்படிக்கையையும் திருத்தப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தயாராக விருக்கின்றனர். அந்த நிபந்தனையில் இவ்வுடன்படிக்கைகளை நாங்கள் உறுதிசெய்யக் கூடும். சமாதானமும் ஆயுதப் பரிஹாரணமும் ஒன்றுசேர்ந்த விஷயமென்பது எங்கள் நம்பிக்கை. ஆயுதப் பரிஹாரண உடன்படிக்கை நிறைவேற்றப் பட்டாலல்லது ஜனங்களுக்குச் சாவதானமேற்படுவதென்பது சாத்தியமில்லை. இப்பொழுது நடந்துவருவதுபோல் இனியும் போட்டி போட்டுக்கொண்டு யுத்ததளவாடங்கள் தயாரிக்கப்படும்பக்ஷத்தில் பாதுகாப்பென்பது சாத்தியமேயில்லை. சங்க ஒப்பந்தமே இதைத்தான் ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. ஆகவே நாம் புதிதாக எவ்வித உடன்படிக்கைகள் தயாரிப்பதாக விருந்தாலும் ஆயுதப் பரிஹாரணத்தையேற்படுத்துவதையே அவை பொறுத்திருக்கவேண்டும். இக்கொள்கையில் இங்கிலாந்திலுள்ள எல்லாக் கக்ஷியினரும் சம்மதிக்கின்றனர். இக்கொள்கையைக் கொண்டுதான் இங்கிலாந்தின் எதிர்காலக் கொள்கை தீர்மானிக்கப்படும். சர்வதேச ஏற்பாட்டின் மூலம் ஆயுதப் பரிஹாரணத்தில் நாம் திட்டமாக ஏதாகிலும் செய்யாவிடில் சங்கம் ஏற்பட்டதன் உத்தேசத்தை நாம் ஒருக்காலும் நிறைவேற்ற முடியாது. தேசியத் தளவாடங்கள் அப்படியேயிருந்து ஆயுதப் போட்டியும் அப்படியே நடந்து வருவதாயின் சர்வதேச ஒத்துழைப் பேற்படாதென்பதே சங்கஒப்பந்தம் தயாரித்தவர்களின் அபிப்பிராயமாகும். அதனால்தான் 8-வது பிரிவில் ஆயுதப் பரிஹாரணம் வற்புறுத்தப்படுகிறது. இந்தப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு 11-வருஷங்கள் ஆகியும் அது சிறிதும் இன்றுவரையில் நிறைவேற்றப்படவில்லை. வருஷங்கள் பல சென்றும் அதில் நாம் ஒன்றும் இதுவரையில் திட்டமாகச் செய்யவில்லை. லண்டனில் இந்தப் பிரிவு உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இருந்தும் இன்னும் பொதுவாக நடவடிக்கை ஒன்றும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. சமாதான இயக்கம் மெதுவாக ஏற்பட்டு வருகிறது. ஜனங்கள் பொறுமையிழந்து நமது நல்லெண்ணத்தையே சந்தேகிக்கின்றனர். அடியுடன் ஒரு முன்னேற்ற மேற்படவில்லையென்று நான் கூறவில்லை. சென்ற 12-மாதங்களில் விசேஷ முன்னேற்ற மேற்பட்டிருப்பது வாஸ்தவம்தான். ஆனால் ஆயுதப் பரிஹாரண மகாநாடு கூடும்பொழுது யுத்ததளவாடங்களில் மிகுந்த குறைவு உண்டுபண்ணப்படுமென நான் நம்புகிறேன். சங்கத்தின் உத்தேசத்தை நிறைவேற்றுவதில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்" (சுதேசமித்திரன்)

***

காங்கிரஸிற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் ராஜியைஉண்டுபண்ணப் பிரிட்டிஷ் நண்பர் சங்கத்தினரான அலெக்ஸாந்தர் என்பவர் முயன்று வருவதாகவும், அவர் காந்தியடிகளுடன் பேசியிருந்ததாகவும் தெரிகின்றது. சில தினங்களில் அவர் ராஜப்பிரதிநிதியோடு பேசுவாராம். ஜெயகர் நேரு முயற்சி முறிந்து போனதினால் தமது முயற்சியும் பயன்படாது போகுமென்று எண்ணவேண்டியதில்லை என்று அவர் கூறுகின்றாராம்.

***

சென்னைத் தொகுதிக்குப் பொது ஸ்தானத் தேர்தலில் டாக்டர். நடேசமுதலியார், மதனகோபால் நாயுடு, சுந்தரராவ் நாயுடு, ஸா'மி. வெங்கடாசலம் செட்டியார் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஸர்வகலாசாலைக்கு டி. எஸ். ராமஸ்வாமி ஐயரும், இந்திய சட்டசபைக்கு ஸ்ரீமான் A. ராமசாமி முதலியாரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

***

"தமிழ்க் கடல்:--இக்காலத்தில் புஸ்தகாலயங்களைப் (நூல் நிலை) பற்றிப் பெரு முயற்சிகள் ஆங்காங்கே நடைபெறுகின்றன. இம்முயற்சி முன்னுக்கு வருமாறு அறிஞர் பலர் பெரிதும் உழைத்து வருகின்றனர். ஆயினும், அவற்றிற்கான நூல்கள் திருத்தமுற வெளிவரவில்லை. வெளிவந்துள்ள சிற்சில நூல்களும் ஓரே அமைப்பாக ஓர் இடத்திற் கிடைப்பது அரிதாகின்றது. அதனால், ஆத்திசூடி முதல் சங்கச் செய்யுள் இறுதியாக உள்ள நூல்கள் அனைத்தும் 'தமிழ்க் கடல்' என்னும் பெயரால் வெளியிடத் தொடங்கப்பெற்று, அச்சேறி வருகின்றன. இந்நூல்நிலையின் பதிப்பாசிரியர், கா. நமச்சிவாய முதலியார் அவர்கள். மாதந்தோறும் ஒரு நூல் வெளிவரும். இதற்குக் கையொப்பமிடுவோர் ஒரு ரூபாய் முற்பணமாகச் செலுத்த வேண்டும். அப்படிச் செலுத்துவோருக்கு ஒவ்வொரு புஸ்தகமும் முக்கால் விலைக்குக் கொடுக்கப்படும். சென்னை, சாந்தோம் மயிலாப்பூர் தமிழ்க் கடல் ஆபீஸ் மானேஜர் தெரிவிக்கின்றார். இம்முயற்சி மிகவும் பாராட்டத் தகுந்ததே என்பதில் ஐயமில்லை.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

## பாரதி

தேசிய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம் பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாடு | சந்தா | ரூபா | 2 0 0 |
| வெளிநாடு | ,, | ,, | 2 8 0 |
| தனிப்பிரதி விலை | | அணா | 0 4 0 |

விலாசம் :—'பாரதி' கார்யாலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## தேவதாசிகள்

அமெரிக்க மாது மிஸ் மேயோவால் எழுதப்பட்டது. இந்தியர் பழக்க வழக்கங்களைப்பற்றி எழுதியுள்ளார். படிக்க வேடிக்கை. விலை ரூ. **1-0-0**.

முத்தையா புக் டிப்போ,

தபால் பெட்டி 99, சென்னை.

## அமிர்த குண போதினி



5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. 1 வெளிநாடு ரூ 1.4.0 மாதிரி காபி இனாம்.

## ஆங்கில ஆசான்



10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவாயிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,

302, தங்கசாலை வீதி, மதராஸ்.

## கம்பராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்,

சே. கிருஷ்ணமாசாரியார்,

வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | | |
|---|---|---|---|
| பால காண்டம் | ... | ரூ | 5. |
| அயோத்தியா காண்டம் | | ரூ. | 5. |
| ஆரண்ய காண்டம் | ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் | ... | ரூ. | 4-8. |
| சுந்தர காண்டம் | ... | ரூ. | 5. |

(வி பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய

கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார், போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில் உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ **1-0-0**. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—"கலா நிலயம்",

11, வேள்ளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)